# தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2021

# தமிழ்மொழியும் இலக்கியமும்

# பல்கலைக்கழகப் புகுமுகநிலை

# உயர்தரம் 2 & 3

# H2 & H3 Tamil Language & Literature

# Syllabus 2021

CURRICULUM PLANNING & DEVELOPMENT DIVISION
MINISTRY OF EDUCATION, SINGAPORE

# பொருளடக்கம்


**இயல் 1** **அறிமுகம்** **2**

பாடத்திட்டத்தின் நோக்கங்கள், கோட்பாடு வழிகாட்டும் கொள்கைகள்

கல்வியின் விரும்பத்தக்க விளைவுகளும் கற்றல் விளைவுகளும்

பாடக்கலைத்திட்ட அமைப்புமுறை

**இயல் 2** **உள்ளடக்கம்** **12**

பரந்துபட்ட மூன்று கருப்பொருள்கள்

மொழித் திறன்கள்

இலக்கியக் கூறுகள்

இலக்கிய வகைகள்

பாடவேளை

**இயல் 3** **பயிற்றுமுறைகள்** **22**

சிங்கப்பூர்க் கற்பித்தல் முறைமை - ஒரு பார்வை

மொழித்திறன்களையும் இலக்கியப் பகுப்பாய்வையும் ஒருங்கிணைத்தல்

வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல்

சிந்தனையைக் காட்சிப்படுத்தும் உத்திமுறை

மின்னியல் சார்ந்த பயிற்றுமுறைகளின் பயன்பாடு

**இயல் 4** **மதிப்பீடு** **31**

மதிப்பீட்டின் நோக்கம்

மதிப்பீடு - சிங்கப்பூர் கற்பித்தல் முறைமையில் உள்ள ஒரு கற்பித்தல் செயல்முறை

கற்போரை மையப்படுத்துதலும் சமச்சீர் மதிப்பீடும்

**பின்னிணைப்பு** **38**

1. பரிந்துரைக்கப்பட்ட இலக்கியங்கள்
2. பரிந்துரைக்கப்பட்ட இலக்கணக்கூறுகள்
3. பரந்துபட்ட கருப்பொருள்களுக்கான வழிகாட்டும் வினாக்கள்

# இயல் 1

## அறிமுகம்

### பாடத்திட்டத்தின் நோக்கங்கள், கோட்பாடு

ஒருவர் தம் சுற்றுச்சூழலையும் உலகத்தையும் புரிந்துகொள்ள மொழி பாலமாக அமைகிறது. அடிப்படை மொழித்திறன்களாகிய கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றின் வாயிலாக ஒருவர் தம் எண்ணங்களை வெளிப்படுத்துவதோடு பிறரோடு கருத்துப்பரிமாற்றத்திலும் ஈடுபடுகிறார். இதன்வழி, அவர் பல்வேறு பின்னணி கொண்டவர்களோடு தொடர்பிணைப்பை ஏற்படுத்திக்கொண்டு உள்ளூரும் உலகமும் சார்ந்த சிக்கல்கள் குறித்து ஆழமான புரிந்துணர்வை வளர்த்துக்கொள்கிறார்.

ஒவ்வோர் இனத்தவரது பன்னெடுங்காலப் பாரம்பரியத்தில் செழித்திருக்கும் பண்பாட்டு மூலங்களையும் மரபுவழிப் பண்புகளையும் போற்றிப் புரிந்துகொள்ள நல்ல வழித்தடத்தை அமைத்துத் தருகிறது தாய்மொழிக் கல்வி. பிற இனத்தவரின் பண்பாட்டுக்கூறுகளை அறிந்துகொள்வதால், மாணவர்கள் தங்கள் மொழித்திறன்களையும் பண்பாட்டு அறிவையும் செம்மைப்படுத்திக்கொள்கிறார்கள். அது மட்டுமல்லாது அவை வழங்கப்படுகின்ற இடங்களில் நல்ல தொடர்பிணைப்பை ஏற்படுத்திக்கொள்ளவும் அவர்களால் இயலும்.

மாணவர்கள் தம்மையறிவதற்கும் தாம் வாழும் உலகத்திலுள்ள மனிதர்களின் வேறுபட்ட நிலைகளையும் பலதரப்பட்ட சமூகச் சிக்கல்களையும் ஆழமாகப் புரிந்துகொள்வதற்கும் இலக்கியம் ஒரு படிக்கல்லாக அமைகிறது. பல்வேறு சிக்கல்களைப் பல்வேறு கோணங்களிலும் கண்ணோட்டத்திலும் பார்ப்பதன்வழி மாணவர்களின் அறிவுப்பார்வை விரிவடைகிறது. தமிழ்மொழியில் இலக்கியம் படிக்கும் அனுபவமானது தமிழின் தொன்மையான வரலாற்றுச் சிறப்புகளையும் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் சீர்தூக்கிப் பார்க்க உதவுவதோடு மாணவர்களிடையே பண்பாட்டு இரசனையை வளர்ப்பதற்கும் வகை செய்கிறது.

தாய்மொழியையும் இலக்கியத்தையும் படிப்பதால் மாணவர்களின் மொழிப் புலமை, இலக்கியத் திறன்கள், பண்பாட்டு அறிவு முதலியவை மேம்படும். பல்லினச் சமூகங்கள், மொழிகள், பண்பாடுகள், விழுமியங்கள் முதலியனவற்றை ஆழமாகப் புரிந்துகொள்வதன் வாயிலாக மாணவர்களைப் பண்பாட்டுத் தூதுவர்களாகவும் பகுத்தாயும் புத்தாக்கச் சிந்தனைமிக்கவர்களாகவும் உருவாக்க வேண்டுமென்பதே மாற்றியமைக்கப்பட்ட 2021 புகுமுகநிலை உயர்தரம் 2&3 தமிழ்மொழிப் பாடத்திட்டத்தின் நோக்கமாகும்.

கற்றல் தொடர்பான கல்வியமைச்சின் அடிப்படைச் சிந்தனைகளைச் சிங்கப்பூர் பாடக்கலைத்திட்டக் கோட்பாடு பிரதிநிதித்துப் பாடத்திட்டத்தின் உருவாக்கத்திற்கும் அமலாக்கத்திற்கும் வழிகாட்டுகிறது.

## சிங்கப்பூர்ப் பாடக்கலைத்திட்டக் கோட்பாடு

விழுமியங்களை மையப்படுத்திய முழுமையான கல்விமுறையில் நமக்கு நம்பிக்கை உண்டு. ஒவ்வொரு பிள்ளையும் கற்றுக்கொள்ள விழைவார்; அவரால் கற்றுக் கொள்ளவும் இயலும் என்பதில் நமக்கு நம்பிக்கை உண்டு. நாம் நடவடிக்கைகளை வடிவமைக்கும்போது மாணவர்களின் கற்றல் தேவைகளில் பல்வேறு வகையான குவிநோக்குடன் தனிக் கவனம் செலுத்துகிறோம்.

**பின்வருவனவற்றால் கற்றல் தழைத்தோங்கும் என்று நம்பிக்கை கொள்கிறோம்:**


- அச்சமற்ற கற்றல் சூழலில் சாதகமான ஆசிரியர்-மாணவர் உறவுமுறையையும் சக இணையாளரிடையே உள்ள உறவுமுறையையும் மாணவர்கள் மேம்படுத்திக் கொள்வார்கள்.

- மாணவர்கள் முனைப்புடன் தங்களது கருத்துகளைத் தெரிவிப்பார்கள்; உற்சாகமாகக் கருத்தாடல்களில் பங்கேற்பார்கள்.

- மாணவர்கள் தங்களது கற்றல் அனுபவங்கள்வழியாகப் பெறும் அறிவால் புதிய சிந்தனைத் திறன்களையும் கருத்து நிலைப்பாட்டையும் கைவரப்பெறுவார்கள்.

- மாணவர்களின் கற்றல் இடைவெளிகளைக் கண்டறியவும் சீரமைக்கவும் மதிப்பீடு பயன்படுவதோடு அவர்களைச் சுய கற்றலுக்கு இட்டுச்செல்லும்.

21-ஆம் நூற்றாண்டுத்திறன் சட்டகத்திற்கு ஏற்ற வகையில், மாணவர்கள் கருத்துப்பரிமாற்றம், உடனிணைந்து செயலாற்றுதல், தகவல்பெறும் திறன்கள்; குடிமையியல்சார் கல்வி, உலகளாவிய விழிப்புணர்வு, பல்லினப் பண்பாட்டுப் புரிந்துணர்வு, நுண்ணாய்வுச் சிந்தனை, புத்தாக்கச் சிந்தனை ஆகியவற்றில் தேவையான திறன் வளர்ச்சிபெற்று அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தும் ஆற்றலை வளர்த்துக்கொள்வர்.




## கருத்துப்பரிமாற்றம், உடனிணைந்து செயலாற்றுதல், தகவல் திறன்கள்

- பெற்ற தகவல்களைப் பொறுப்புடன் பயன்படுத்துதல். அவற்றைப் பகிர்ந்துகொள்ளும்போது பிறருக்குப் புரியும் வகையில் எடுத்துரைத்தல்
- இணைநிலையிலும் குழுநிலையிலும் பொறுப்புணர்வுடன் கடமையாற்றுதல்
- புதியதும் பலதரப்பட்டதுமான தகவல்கள், கருத்துகள், நோக்குகள் முதலியவற்றைப் பரந்த மனப்பான்மையோடு ஏற்றுக்கொண்டு புரிந்துணர்வுடன் செயற்படுதல்
- எடுத்த காரியத்தைச் செய்து முடிக்கவும் குழுவின் பொதுவான இலக்குகளை அடையவும் உரிய முறையில் பங்காற்றுதல்
- தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நுண்ணறிவைப் பெறுதல்
- அறிவுசார் சொத்துரிமைகளை மதித்தலும் பொறுப்புணர்வுடன் தகவல்களைப் பயன்படுத்துதலும்

**குடியியல்சார் அறிவு, உலகளாவிய விழிப்புணர்வு, பல்லினப் பண்பாட்டுப் புரிந்துணர்வுத் திறன்கள்**

- சமூக அக்கறை கொண்ட துடிப்பான வாழ்வை மேற்கொள்ளுதல்
- தேசிய, பண்பாட்டு அடையாளங்களைத் தெரிந்துகொண்டு நாட்டுருவாக்கத்துக்குத் தேவையான பண்புநலன்களைப் பெறுதல்
- உலக நடப்புகளை அறிந்துகொள்வதில் அக்கறை காட்டுதல்
- பல்லினப் பண்பாடு குறித்த கூருணர்வும் விழிப்புணர்வும் பெறுதல்

**நுண்ணாய்வுச் சிந்தனையும் புத்தாக்கச் சிந்தனையும்**

- புதியனவற்றை அறிந்துகொள்ளும் முனைப்பையும் அது குறித்துச் சிந்தித்துக் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளும் திறனையும் படைப்பாக்கத்திறனையும் மேம்படுத்திக்கொள்ளல்
- காரண காரிய விளக்கமும் தெளிவாக முடிவெடுத்தலும்
- சுயபிரதிபலிப்பின்மூலம் விழிப்புணர்வையும் சுயசிந்தனைக் கட்டுப்பாட்டையும் பெறுதல்

## வழிகாட்டும் கொள்கைகள்

புகுமுகநிலை உயர்தரம் 2&3 பாடக்கலைத்திட்டம், தாய்மொழியைத் திறம்படப் பயன்படுத்தும் மாணவர்களை உருவாக்க, 2010-ஆம் ஆண்டு மறு ஆய்வுக்குழு பரிந்துரைத்த பரந்துபட்ட மூன்று குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

அ) **கருத்துப்பரிமாற்றம்** – தாய்மொழியில் ஆற்றலையும் கருத்துப்பரிமாற்றம் செய்யும் திறனையும் மாணவர்களிடையே வளர்ப்பது.

ஆ) **பண்பாடு** - தாய்மொழியைக் கற்பதன் வாயிலாக நம் மாணவர்கள் தங்களது பண்பாடு, பாரம்பரியம், இலக்கியம், வரலாறு ஆகியவற்றை ஆழ்ந்து கற்கின்றனர். இது அவர்களுடைய தனித்தன்மையை அடையாளங்காணவும் தங்களை மேம்படுத்திக்கொள்ளவும் வழிவகுக்கிறது.

இ) **இணைப்பு** - தாய்மொழியில் திறம்பெற்றிருப்பது ஆசியாவிலும் உலக நாடுகளிலும் வாழும் அதே மொழியைப் பேசுவோர் அல்லது ஒத்த பண்பாட்டைக் கொண்டோரோடு நம் மாணவர்கள் தொடர்புகொள்ள வழிவகுக்கிறது.

திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டம் பின்வரும் மூன்று கோட்பாடுகளை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. அவை சிங்கப்பூர்ப் பாடக்கலைத்திட்டத்தை வழியொற்றி அமைந்துள்ளன.

### 1. விழுமியங்களையும் பண்புநல வளர்ச்சியையும் மையமாகக் கொண்ட முழுமையான கல்வி

பண்பாட்டு மரபுடைமைகளை மூல மொழியில் கற்கும்போதே அவற்றை ஆழமாகப் புரிந்துகொள்வதோடு முழுமையாகவும் அனுபவிக்கமுடியும். தாய்மொழிப் பாடங்கள் பண்பாடு, வரலாறு, மரபுடைமை, விழுமியங்கள் போன்றவற்றை மதித்துப் போற்றுவதற்கான வாய்ப்புகளைச் சேர்க்கும் வகையில் அமைந்திருக்க வேண்டும். பொருத்தமான மொழி வளங்களையும் இலக்கிய வளங்களையும் கவனமாகத் தேர்ந்தெடுப்பது மாணவர்களிடையே அர்த்தமுள்ள கலந்துரையாடல்கள் நிகழ வழிவகுக்கும்.

### 2. கற்றல் அர்த்தமுள்ளதாகும்போது மாணவர்கள் சவால்களுக்கு ஏற்றவாறு ஊக்கத்தோடு செயற்படுகின்றனர்.

மாணவர்கள் பல்வேறு மொழித்திறன்களை ஒருங்கிணைத்து அர்த்தமுள்ள வழியில் கற்பதற்கும் பயன்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்க வேண்டும். இதன்மூலம் மாணவர்கள் தங்களது கற்றலுக்குத் தாமே பொறுப்பேற்றுக் கொள்வர்.

### 3. சிந்தனைத் திறன்களின் மேம்பாடும் பல்வேறு நோக்குகளும் கற்றலின் முக்கிய அங்கங்களாகும்.

மாணவர்கள் பெறும் தரவுகளைப் பல்வேறு கோணங்களில் அறிவுபூர்வமாகச் சிந்தித்துக் கருத்துருவாக்கம் செய்வதற்கும், பொருள் விளங்கிக்கொள்வதற்கும், மதிப்பிட்டறிவதற்கும் ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும். தங்கள் சிந்தனைபற்றிய தெளிவு பெற்றிருக்கும் மாணவர்களால் தங்கள் சுய கற்றலைக் கண்காணித்து, மதிப்பிட்டு, மேம்படுத்திக்கொண்டு ஒவ்வொரு கருப்பொருளையும் ஆழமாகப் புரிந்துகொள்ளமுடியும்.

பரிந்துரைக்கப்பட்டுள்ள பாடப்பகுதிகள் இலக்கியஞ்சார்ந்த சிறப்புகளைக் கொண்டமைந்துள்ளன. அவை மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்துவதோடு அவர்களுக்கு ஏற்புடைய தகவலறிவையும், திறன்களையும், சிறந்த மனப்பாங்கையும் வளர்த்திட உதவிடும்.

இவ்வாறு பல்வேறு பண்பாட்டுச் சூழல்களைப் பிரதிபலிக்கும் இலக்கியப் பனுவல்களைக் கொண்டு திருத்தியமைக்கப்பட்ட இந்தப் பாடத்திட்டம் இலக்கியஞ்சார்ந்த படிப்பை மேனிலையில் தொடர விரும்பும் மாணவர்களுக்கு ஏற்புடைய கற்றல் அனுபவங்களைச் சேர்க்கும்.

மாணவர்களுக்குப் பயன்மிகு கற்றல் அனுபவங்களைச் சேர்க்கப் பரிந்துரைக்கப்பட்ட வளங்களுக்கு அப்பால் கூடுதல் வளங்களை ஆசிரியர்கள் தேர்ந்தெடுத்துக் கற்பிக்கப் பின்வரும் குறிப்புகள் வழிகாட்டியாய் அமையும்.

**அ. இலக்கிய வளம்:** தெரிவுசெய்யப்படும் வளங்கள் மாணவர்கள் தங்களையும் தாங்கள் வாழும் உலகத்தையும் ஆய்ந்தறிந்து பார்க்கக்கூடிய தரமிக்கதாய் இருத்தல் வேண்டும். அத்துடன் அவை ஆழ்ந்த கலந்துரையாடலுக்கு இட்டுச்செல்லும் கருப்பொருள்களையும் பாடப்பொருள்களையும் கொண்டிருக்க வேண்டும்.

**ஆ. இலக்கிய அறிவையும் திறன்களையும் கைவரப்பெறுதல்:** அவை இலக்கியத்தின் அடிப்படைக் கூறுகளைப் படித்தறியவும் ஆராயவும் இடமளிக்க வேண்டும். மேலும், படித்தறியும் இலக்கியக் கூறுகளை முறையே தம் படைப்புகளில் பயன்படுத்தும் ஆற்றலை மாணவர்க்கு வளர்ப்பனவாகவும் இருக்க வேண்டும்.

**இ. பலவகையான பனுவல்கள்:** அவை உள்நாட்டுப் படைப்புகளையும் வெளிநாட்டுப் படைப்புகளையும் சமநிலையில் கொண்டிருக்க வேண்டும்.

**ஈ. ஏற்புடைமை:** அவை மொழி, கருப்பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் மாணவருக்கு ஏற்புடையவையாக இருக்க வேண்டும். அத்துடன் அவை மாணவரை ஈர்த்து அவற்றில் ஈடுபடுத்தவும் வேண்டும்.

## கல்வியின் விரும்பத்தக்க விளைவுகளும் கற்றல் விளைவுகளும்

### உயர்தரம் 2&3 தமிழ்மொழிப் பாடத்திட்டத்திற்கான கல்வியின் விரும்பத்தக்க விளைவுகள்:

அ. ஆசிய மொழிகள், தாய்மொழிகள், பண்பாட்டு மரபுகள், நம்பிக்கைகள், சமயங்கள், விழுமியங்கள் முதலியவை பற்றிய ஆழ்ந்த புரிந்துணர்வுடைய **ஆசிய இலக்கியத் தகைமையாளர்களை** உருவாக்குதல்.

ஆ. தாய்மொழி இலக்கியங்களில் உள்ள பலவகை இலக்கியப் படைப்புகளை ஆர்வத்துடன் வாசித்துப் போற்றும் **இலக்கிய ஆற்றலும் சிந்தனை வளமும் கொண்ட தரமான வாசகர்களை** உருவாக்குதல்.

இ. வளமான பாரம்பரியக் கூறுகளைத் தன்னகத்தே கொண்ட ஆசிய இலக்கியத்தின் செறிவுமிக்க கூறுகளிலும் தொடர்பிணைப்புகளிலும் ஆழமான புரிந்துணர்வை வளர்த்துக்கொள்வதன்வழி அடிப்படை விழுமியங்களான விடாமுயற்சி, நேர்மை, பொறுப்புணர்வு முதலானவை நிரம்பப்பெற்ற **நுண்ணாய்வுச் சிந்தனைமிக்க மாணவர்களை** உருவாக்குதல்.

ஈ. ஆசிய இலக்கியங்களுக்கும் அவை தவிர்த்த ஏனைய உலக இலக்கியங்களுக்குமிடையே உள்ள இலக்கியப் பரிமாற்ற நிலைகளைக்கொண்டு பல்லினப் பண்பாட்டு விழிப்புணர்வு கொண்ட **உலகளாவிய சிந்தனையாளர்களை** உருவாக்குதல்.

உ. தம் பாரம்பரியத்தில் தோய்ந்தெழுந்து பெறப்பட்ட ஆழமான அனுபவங்களாலும் தொடர்புகளாலும் இலக்கியக் கற்பனைத் திறத்தையும் புத்தாக்கமிக்க மொழிநடையையும் வெளிப்படுத்தும் **புத்தாய்வுப் படைப்பாளர்களைப் பேணி** வளர்த்தல்.

## <u>உயர்தரம் 2 & 3 தமிழ்மொழிப் பாடத்திட்டத்திற்கான கற்றல் விளைவுகள்:</u>

### அ. இலக்கியப் பனுவலை அனுபவித்தல்:

இலக்கியப் படைப்புலகில் தோய்ந்தெழவும் தம் புரிந்துணர்வை ஆழப்படுத்திக்கொள்ளவும் அவற்றைத் தம் வாழ்க்கையோடு தொடர்புபடுத்திப் பார்க்கவும் மாணவர்கள் அறிவர்.

### ஆ. இலக்கிய வகைமைகளைப் போற்றுதல்:

பல்வேறு இலக்கிய வகைகளுள் அடங்கும் இலக்கியக் கூறுகளைப் புரிந்துகொண்டும், பனுவல்களில் உள்ள முருகியல் தன்மைகளை இரசனையோடு அணுகியும், ஒவ்வோர் இலக்கியப் படைப்பிலும் தனித்து விளங்கும் எழுத்தாளரின் மொழி ஆளுகையை உரிய கண்ணோட்டத்தில் துருவி ஆராயும் மனப்பான்மையுடன் சீர்தூக்கிப் பார்க்கவும் மாணவர்கள் அறிந்திருப்பர்.

### இ. கருப்பொருளைத் தக்கவாறு பொருள்விளங்கிக்கொள்ளல்:

பனுவல்களின் வழியே வெளிப்படும் மையக்கருத்துகளையும் சிக்கல்களையும் ஆராய்ந்து அவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்வதோடு ஒவ்வொரு பனுவலிலும் உலகம் குறித்துக் காட்டப்படும் நோக்கத்தின் முக்கியத்துவத்தை ஆராய மாணவர்கள் நன்கறிந்திருப்பர்.

### ஈ. பனுவலோடும் உலகத்தோடும் தம்மை இணைத்துக் காணல்:

மாணவர்கள் தாங்கள் படிக்கும் பனுவல்களில் படைக்கப்பட்டிருக்கும் உலகத்தையும் தாங்கள் வாழும் உலகத்தையும் இணைத்துப் பார்ப்பதன் வாயிலாகத் தங்களை அவற்றுடன் தொடர்புபடுத்திக்கொள்வர். அத்துடன் அவற்றைப் பல்வேறு கோணங்களில் பார்ப்பதன் மூலமாக அவர்கள் தங்களது சொந்த விழுமியங்கள், பார்வைகள், அடையாளங்கள் ஆகியவற்றை மேம்படுத்திக்கொள்ளும் விழிப்புணர்வைப் பெறுவர்.


### உ. கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளுதல்:

மாணவர்கள் உரையாடல் வழியாகவும் எழுத்து வழியாகவும் கருத்துரைகளை உருவாக்கியும், தங்கள் கருத்துரைகளுக்குத் தக்கவாறு சான்றளித்து நிகழ்வுகளையும் அனுபவங்களையும் விளக்கியும், காரண காரிய வகையில் ஆராய்ந்தும், தங்கள் கருத்துகளைப் பிறருக்குத் தொகுத்துரைக்கவும் அறிந்திருப்பர்.

ஊ. இலக்கியப் படைப்புகளை உருவாக்குதல்:

மாணவர்கள் சொந்தப் படைப்புகளை உருவாக்குபவர்களாகவும் தங்களுக்கெனத் தனித்துவமிக்க எழுத்துநடையைக் கொண்டவர்களாகவும் தங்களை வளர்த்துக்கொள்வர்.

## பாடக்கலைத்திட்ட அமைப்புமுறை




மாற்றியமைக்கப்பட்ட புகுமுக வகுப்பு உயர்தரம் 2&3 தாய்மொழிகளின் மொழியும் இலக்கியமும் சார்ந்த பாடத்திட்டம், கருப்பொருள் அடிப்படையிலான அணுகுமுறையைக் கொண்டு மொழி, இலக்கியம் ஆகியவற்றிற்குரிய கற்றல் கற்பித்தலுக்குப் பரந்துபட்ட கருப்பொருள்களை வழிகாட்டியாகக் கொண்டுள்ளது. இந்தப் பரந்துபட்ட கருப்பொருள்களைக் கொண்டு மொழிப் பாடங்களிலுள்ள பனுவல்களையும் இலக்கிய பாடங்களிலுள்ள செய்திகளையும் தொடர்புபடுத்திப் பார்க்க மாணவர்கள் அறிந்துகொள்கிறார்கள்.

இவை கால எல்லையைக் கடந்து பல்வேறு சூழல்களுக்கும் பொருந்தக்கூடிய வகையில் மாணவர்களிடையே ஆழமான புரிந்துணர்வை வளர்க்க உதவுகின்றன. பல்வேறு இலக்கிய வகைகளின் அடிப்படையில் அமையப்பெற்ற தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டம் இலக்கியம் கற்பித்தலுக்கு அடிப்படையாகும். பரிந்துரைக்கப்பட்ட பகுதிகளும் பார்த்திராத பனுவல்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட கருப்பொருள்களின் அடிப்படையில் அமையும்.

## மொழி

மொழிப் பாடப்பகுதியில் தற்காலப் பனுவல்கள், நடப்புவிவகாரச் செய்திகள் முதலான நடைமுறைக்கு ஏற்ற வளங்கள் இன்றைய உலகச் சூழலை நன்கு பிரதிபலித்து மாணவர்கள் பகுத்தாய்ந்து கற்கும் நிலையை உருவாக்குகின்றன. தற்காலத்திற்குப் பொருந்தும் ஏற்புடைய கருப்பொருள்களைக் கொண்டு பனுவல்கள் அமைந்துள்ளன. அவற்றைப் படிக்கும் மாணவர்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளைத் தத்தம் வாழ்க்கை அனுபவங்களோடு பொருத்திப்பார்ப்பர். அவை தங்களைப்பற்றியும், சமூகத்தைப்பற்றியும், உலகத்தைப்பற்றியும் பரந்துபட்ட நிலையில் அவர்களைச் சிந்திக்கத் தூண்டும். இவற்றின் பயனாக மாணவர்கள் தங்கள் எண்ணங்களை எழுத்திலும் வேறு சில படைப்புகளிலும் வெளிப்படுத்துவார்கள். மேலும், மாணவர்களிடையே ஆக்கபூர்வமான கருத்துப்பரிமாற்றம் நிகழவும் எழுத்துத்திறன் மேம்படவும் இவை அடித்தளமாக அமையும்.

## இலக்கியம்

இலக்கியப் பாடப்பகுதியில் மாணவர்கள் பரிந்துரைக்கப்பட்ட பாடப்பகுதியில் திருக்குறள், பழமொழி முதலான நீதிப் பாடல்களையும், தற்கால இலக்கியப் பகுதிகளையும் படித்து இலக்கிய இரசனையையும் எழுத்தாற்றலையும் வளர்த்துக்கொள்வர். உள்ளூர், வெளியூர் இலக்கியப் படைப்புகளைப் படிப்பதன் வழியாக மாணவர்கள் பல்வகைப் பண்பாட்டு நெறிமுறைகள் குறித்த விழிப்புணர்வையும் புரிந்துணர்வையும் பெறுவார்கள். திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டத்திலுள்ள பார்த்திராத பனுவல்கள் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலின் நோக்கங்களுக்குப் பொருந்துமாறு அமையும். இவற்றின் வழியே மாணவர்களைப் பயன்முனைப்புமிக்க வாசகர்களாகவும் ஆழ்ந்து கற்கும் நோக்குடையவர்களாகவும் உருவாக்க இயலும். மேலும், இலக்கியப் பகுத்தாய்தல் திறன்களையும் மாணவர்கள் வளர்த்துக்கொள்வர். பாடநூல்களுக்கு அப்பால் பரந்துபட்ட வாசிப்பில் ஈடுபடும் மாணவர்கள் பண்பாட்டுத் தெளிவும் விழுமிய நிறைவும் கொண்டு திகழ்வர்.

## புகுமுக வகுப்பு – உயர்தரம் 3

உயர்தரம் 3 பயிலும் மாணவர்கள் மொழியில் மிகச் சிறந்த ஆற்றலும் ஈடுபாட்டுணர்வும் கொண்டவர்களாக இருப்பர். மொழியிலும் இலக்கியத்திலும் ஆழ்ந்து கற்கும் நோக்குடையவர்களாகவும் திகழ்வர். மாணவர்கள் மொழியை ஆழமாகவும் அகலமாகவும் படிக்கவும் அவற்றையொட்டிய திறன்களைப் பெறவும் ஏற்புடைய வகையில் பாடத்திட்டம் அமையும். இப்பாடத்திட்டத்தில் பயிலும் மாணவர்கள் பல்வகை இலக்கியங்களைப் பற்றிய அறிமுகத்தைப் பெறுவதோடு அப்பகுதிகளைப் பகுந்தாய்ந்துப் பார்க்கும் திறனையும் பெற்றுச் சுயமாகப் படைப்புகளை உருவாக்கும் ஆர்வம் கொண்டிருப்பர்.

# இயல் 2

## உள்ளடக்கம்

### பரந்துபட்ட மூன்று கருப்பொருள்கள்

பாடக்கலைத்திட்டத்தின் கூறுகளாகிய மொழியையும் இலக்கியத்தையும் முறையே வழிநடத்திடப் பரந்துபட்ட மூன்று கருப்பொருள்கள் அடையாளங்காணப்பட்டுள்ளன. இவை மொழியையும் இலக்கியத்தையும் கற்பிப்பதற்குத் துணைபுரியும். மேலும், இங்கு கொடுக்கப்பட்டுள்ள கருப்பொருள்கள், ஏற்புடைய இலக்கியப் பனுவல்களை அறிமுகப்படுத்துவதற்கும் அவற்றைச் சார்ந்த உட்பிரிவுகளைக் கற்றல் கற்பித்தலுக்குப் பயன்படுத்துவதற்கும் உதவும்.

அம்மூன்று கருப்பொருள்களாவன:

1. **உறவு**
2. **மாற்றம்**
3. **தெரிவு**




இந்தப் பரந்துபட்ட கருப்பொருள்கள் உயர்தரம் 2 தமிழ்மொழி இலக்கிய மாணவர்கள் கருத்துருவாக்கக் கண்ணோட்டத்தைப் பெற வழிவகுக்கும். மேலும், பல்வேறுபட்ட பனுவல்களின் வழியே பெறும் செய்திகளை அவரவர் வாழ்க்கை அனுபவங்களோடு பொருத்திப் பார்க்கவும் அவை உதவிடும். இதன்வழி, மாணவர்கள் பரந்துபட்ட நோக்கில் தங்கள் வாழ்வில் எதிர்ப்படும் சிக்கல்கள் குறித்துக் கலந்துரையாடுவர். அவற்றை இலக்கியப் படைப்புகளோடு தொடர்புபடுத்தியும் பார்ப்பர்.

வரையறுக்கப்பட்ட கருப்பொருள்கள் சங்ககாலம் தொடங்கித் தற்கால இலக்கியப் படைப்புகள் வரையிலும் பாடப்பொருகள்களாகப் பயின்று வருவதை நம்மால் காண இயலும். உலகளாவிய போக்குடையனவும் நீடித்த முக்கியத்துவம் கொண்டவையுமான இந்தக் கருப்பொருள்கள் எக்காலத்திலும் கற்பதற்கும் ஆராய்வதற்கும் ஏற்புடையனவாய் அமைகின்றன. அவை வகுப்பறைகளில் அர்த்தமுள்ள கலந்துரையாடல்களும் கருத்தாடல்களும் நடைபெற இடம் தருகின்றன.

பொதுவாக, மொழித்திறன்களும் இலக்கியத் திறனாய்வும் ஒருங்கிணைந்த முறையில் பயிற்றுவிக்கப்படவேண்டும். அப்போதுதான் மொழி, இலக்கியம் இரண்டையும் குறித்துக் கருத்துப்பரிமாற்றம் நிகழ வாய்ப்புகள் அதிகரிக்கும்.

பரந்துபட்ட கருப்பொருள்களுக்கு ஏற்ப ஆசிரியர்கள் கற்றல் வளங்களைத் தேர்ந்தெடுக்கலாம். ஆசிரியர்கள் மாணவர்களை வழிநடத்தப் பொருத்தமான கற்றல் வளங்களைப் பயன்படுத்தலாம். மாணவர்கள் அவற்றைத் திறனாய்வுக் கண்ணோட்டத்தில் படிக்கவும் பனுவல்களுக்கு இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை அடையாளங்காணவும் செய்திகளைத் தொடர்புபடுத்திப் பார்க்கவும் ஆசிரியர்கள் வழிகாட்டலாம். கற்றல் கற்பித்தலுக்கு ஆதரவு தரும் விதத்தில் கருப்பொருள்கள் வாயிலாகப் பாடத்துக்கு அப்பாற்பட்ட படைப்புகளைத் தொடர்புபடுத்திப் பார்ப்பதற்கும் படிப்பதற்கும் மாணவர்களுக்கு இது துணைபுரியும்.

<u>தேர்ந்தெடுக்கப்பட்ட கருப்பொருள்கள் பற்றிய சிறு விளக்கம் பின்வருமாறு:</u>

### உறவு

உறவு என்னும் கருப்பொருள் ஒருவர் மற்றொருவரோடு கொண்டுள்ள உணர்வுபூர்வமான தொடர்பினை விளக்குவதோடு ஒன்று மற்றொன்றோடு கொண்டுள்ள தொடர்பினைக் குறிப்பதாகவும் அமைகிறது. பல்கலைக்கழகப் புகுமுகநிலை மாணவர்கள் மக்கள், நிகழ்வுகள், வாழும் சூழல் இவற்றிற்கிடையே உள்ள உறவுநிலையையும் பிணைப்பையும் அடையாளம் காண்பது அவசியமாகும். இந்தக் கூறுகளை அறிந்துகொள்ளும் மாணவர்கள் தெளிவான உலகியல் பார்வையைப் பெறுவர். நடைமுறை வாழ்வில் கருத்துப்பரிமாற்றமே மொழியின் அடிப்படைத் தேவையாக அமைவதால் அத்திறனை வளர்த்துக்கொள்வது அவசியமாகும். பயன்முனைப்புமிக்க கருத்துப்பரிமாற்றம் மக்களிடையே நல்லுறவை வளர்க்க உதவும். பாடப்பனுவல்களில் இடம்பெறும் உறவுமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல்கள் மாணவர்களிடையே நல்லுறவை வளர்க்க உதவும். இதன் மூலம் 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களாகிய சுய விழிப்பணர்வு, சமூக விழிப்பணர்வு, உலகளாவிய விழிப்புணர்வு குறித்து மாணவர்களிடையே தெளிவும் புரிந்துணர்வும் மேம்படும்.

### மாற்றம்

மாற்றம் ஒன்றே மாறாதது. நம்மைச்சுற்றி மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. இம்மாற்றங்கள் தனிமனிதர், சமூகம், நாடு, வாழும் சூழல் ஆகியவற்றின்மீது தாக்கத்தை ஏற்படுத்தும். இத்தகைய மாற்றங்களால் விளையக்கூடிய நன்மை தீமைகளை ஆராயும் மனப்போக்கை வளர்ப்பதன்மூலம் மாற்றங்களோடு தொடர்புடைய சிக்கல்களை ஆக்கபூர்வமான வழியில் ஆராய்ந்து ஏற்கும் மனப்பான்மையை மாணவர்களிடையே வளர்க்க இயலும். மாணவர்கள் பனுவல்களைப் புரிந்துகொண்டு வாசிக்கும்போதும் ஆராயும்போதும் மக்கள், உறவு, பண்பாடு, சமூகம் இவற்றுக்கிடையே எவ்வாறு ஆழமான தாக்கம் ஏற்படும் என்று கலந்துரையாடுவர். மாற்றம் குறித்த கருத்துருவாக்கம் பல்வேறு களங்களைத் தொடர்புபடுத்துவதால் அது பயன்மிக்க கருத்தாடல் நிகழ்வதற்கும் துணைபுரிய வல்லதாகும்.

### தெரிவு

அன்றாட வாழ்வில் நாம் பல்வேறு தெரிவுகளை எதிர்நோக்குகிறோம். பல்கலைக்கழகப் புகுமுகநிலை மாணவர்கள் ஆக்கபூர்வமான, பொறுப்புமிக்க வகையில் முடிவெடுக்கக்கூடிய திறன்களைப் பெற்றிருத்தல் வேண்டும். பாடப்பனுவல்களில் கதாபாத்திரங்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் அவற்றைச் சமாளிக்க அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளையும் குறித்துப் படித்தறியும்போது முடிவெடுக்கும் நிலையில் பல தெரிவுகளைச் சீர்தூக்கிப்பார்க்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துகொள்வர். முடிவெடுக்கும் நிலைகளில் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை ஆராய்ந்துபார்க்கும் திறனையும் மாணவர்கள் வளர்த்துக்கொள்வர். இவற்றின் மூலம் சிக்கல்களை மாறுபட்ட கண்ணோட்டத்தில் அலசி ஆராய்வதோடு தார்மீகப் பொறுப்புணர்வின் முக்கியத்துவத்தையும் அவர்கள் அறிந்துகொள்வர்.

## மொழித் திறன்கள்

தமிழ்மொழி வாழும் மொழியாக உயிர்ப்புடன் இலங்குகின்றது. துடிப்பான முறையில் மொழியைக் கற்பவராகவும் திறம்பட மொழியைப் பயன்படுத்துபவராகவும் தங்களை வளர்த்துக்கொள்ள விரும்பும் உயர்தரம் 2 தமிழ்மொழி இலக்கிய மாணவர்கள், தமிழ்மொழியில் தன்னம்பிக்கையுடன் கருத்தைப் பரிமாறிக்கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும்.

2010-ஆம் ஆண்டின் தாய்மொழிகள் மறு ஆய்வு, மொழியைத் திறம்படப் பயன்படுத்துவோரை உருவாக்கத் தாய்மொழியின் கற்றல் கற்பித்தலுக்கான மூன்று பொதுவான நோக்கங்களை அடையாளங்கண்டது. இந்த நோக்கங்கள் இன்றைய சூழலிலும் பொருத்தமானவையாகவே உள்ளன. அவை பின்வருமாறு:

- **கருத்துப்பரிமாற்றம்**

இது வாழ்க்கைக்கும் வேலைக்கும் உதவும் இன்றியமையாத திறனாகும். ஆங்கில மொழியில் நிபுணத்துவம் பெற்றிருப்பதோடு, தாய்மொழியிலும் கருத்துப்பரிமாறிக்கொள்ளும் திறனும் ஆற்றலும் பெற்றிருப்பது சிங்கப்பூரர்களுக்கு உலகளவில் போட்டித்தன்மையை அதிகரிக்கக்கூடியது.

- **பண்பாடு**

தாய்மொழிக் கல்வியானது அம்மொழியைக் கற்கும் மாணவர்களுக்கு மொழியோடு சார்ந்துள்ள பண்பாடு, மரபு, இலக்கியம், வரலாறு முதலானவற்றில் ஆழமான புரிந்துணர்வையும் ஈடுபாட்டையும் உருவாக்குகிறது. அதன்வழி மொழியைப் போற்றிப் பாராட்டும் தன்மையை வளர்த்துத் தமக்கெனத் தனித்துவமிக்க அடையாளத்தை அமைத்துக்கொள்ள மாணவர்களுக்கு அது உதவுகிறது. சமூகத்தில் ஒவ்வோர் இனத்தவரின் பண்பாட்டு விழுமியங்களையும் மரபுவழிப் பண்புகளையும் கட்டிக்காக்கவும் அடுத்த சந்ததியினருக்குக் கொண்டுசேர்க்கவும் இந்தத் தாய்மொழிக் கல்விமுறை முக்கியமானதாகும்.

- **தொடர்பு**

தாய்மொழிகளில் திறன்மிகுந்து விளங்குவது, நம் மாணவர்களை ஆசியாவிலுள்ள மற்றச் சமூகங்களிலும் உலக நாடுகளிலும் அதே மொழியைப் பேசும் அல்லது பண்பாட்டைப் பின்பற்றுவோருடன் தொடர்பிணைப்பை ஏற்படுத்திக்கொள்ளப் பெரிதும் துணைபுரிகிறது.

ஆசிரியர்கள் வகுப்பறையில் மாணவர்களுக்காகப் பல்வேறுபட்ட கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கலந்துரையாடல், படைப்பாக்கம், வாசித்தல், எழுத்துவேலை எனப் பல்வேறு மொழி நடவடிக்கைகளின் வழியே மாணவர்கள் தத்தம் கருத்துப்பரிமாற்றத் திறன்களைப் பயன்படுத்தவும் மேம்படுத்தவும் தக்க வாய்ப்புகளை ஆசிரியர்கள் ஏற்படுத்தித் தருதல் வேண்டும். அவற்றோடு ஆசிரியர்கள் மாணவர்களிடையே உயர்சிந்தனைத் திறனைகளை வளர்க்கும் மொழி நடவடிக்கைகளை மேற்கொண்டும், சமமான அளவு வழக்கமான(எழுதுகோல்) எழுத்துப்பணிகளையும் கணினிவழியே தட்டச்சிடும் பயிற்சிகளையும் திட்டமிட்டு வழங்குதல் அவசியமாகும். இத்தகைய முயற்சிகள் மாணவர்களிடையே பலதரப்பட்ட இலக்கியம் சார்ந்த பனுவல்களிலும் நடைமுறை வாழ்க்கையில் காணப்பெறும் பனுவல்களிலும் தக்க அனுபவப் பயிற்சிகள் பெற வழிவகுக்கும்.

## மொழிப் பயன்பாட்டில் உயர்தரச் சிந்தனைத் திறன்கள்

பயன்பாட்டுக் கண்ணோட்டத்தில், மொழி என்பது பேச்சுவழியிலும் எழுத்துவழியிலும் தொடர்புக்கு உதவும் ஒரு கருவியாகும். தன்னம்பிக்கையுடன் சிறந்தமுறையில் கருத்துப்பரிமாறிக்கொள்வதற்குக் கொள்திறன்களான கேட்டலும் படித்தலும், ஆக்கத்திறன்களான பேசுதலும் எழுதுதலும் ஆகிய அடிப்படை மொழித்திறன்களின் ஒருங்கிணைந்த செயற்பாடு அவசியமாகும். உயர்தரம் 2 தமிழ்மொழி இலக்கிய மாணவர்கள் கல்வித்திறன் பெற்றுப் பல்வேறு துறைகளில் தனித்தன்மை மிக்கவர்களாக விளங்குவர். உலகம் முழுவதும் குறிப்பாக ஆசிய நாடுகளில் தமிழ் முதலான தாய்மொழிகளைப் பிற மொழிகளோடு இணைக்கும் பாலமாகவும் அவர்கள் செயற்படுவர்.

எனவே, பாடத்திட்டத்தில் மொழி சார்ந்த பாடப்பகுதிகளாகிய வாசிப்புக் கருத்தறிதலிலும் எழுத்துப்பயிற்சிகளிலும் உயர்தர அறிவுசார் நுண்திறன்களும் சிந்தனைத்திறன்களும் வலியுறுத்தப்படுகின்றன. வேறுபட்ட எழுத்து வடிவிலான கட்டுரைகள் (நிகழ்வு, வருணனை, விவாதம், கருத்துவிளக்கப்படம்), எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றத்திறன் சார்ந்த சிறு விளக்கவுரைகள் முதலானவற்றை வாசிக்கவும் எழுதவும் மாணவர்கள் திறன் பெற்றிருப்பர்.

எதிர்காலப் பணிசார்ந்த வாழ்க்கைக்கான உண்மையான சூழலைப் பிரதிபலிக்கும் விதமாக வாசிப்புக் கருத்தறிதலில் ஒன்றுக்கு மேற்பட்ட பனுவல்கள் இடம்பெறும். மாணவர்கள் அப்பனுவல்களைக்கொண்டு கருத்தறிதல், ஒப்பிடுதல், தொகுத்தளித்தல், பகுத்தாய்தல், மதிப்பிடுதல் முதலிய மொழி நடவடிக்கைகளில் ஈடுபடுவர். எனவே, வாசித்தல் கருத்தறிதல் சார்ந்த மதிப்பீட்டில் மாணவர்கள் இரு பனுவல்களைப் படித்து, அவற்றைத் தொகுத்தாய்ந்தும் பகுத்தாய்ந்தும் கருத்துரைக்க வேண்டும். மேலும், மாணவர்கள் தங்கள் கருத்துகளை எழுத்துவழியாகவும் கணினி சார்ந்த தட்டச்சு வடிவிலும் வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றிருத்தல் வேண்டும்.

## எழுதுகோல் சார்ந்த எழுத்துப்பணிக்கும் கணினி சார்ந்த எழுத்துப்பணிக்கும் இடையிலான சமநிலை

இன்றைய சூழலில் கணினி சார்ந்த எழுத்துவேலைகள் பல பணியிடங்களில் வழக்கமாகிவிட்டன. ஆதலால், தமிழ்மொழி கற்றலில் எழுதுகோல் வழியிலான எழுத்துப்பணிகளோடு தட்டச்சிடும் திறனை மாணவர்களிடம் வளர்க்க வேண்டுவதும் அவசியமாகிறது. கணினிவழியிலான தட்டச்சிடும் எழுத்துப்பணிகளில் எளிதில் படைப்புகளைச் செப்பனிடவும் கருத்துகளைச் சீரமைக்கவும் இயலும். இருப்பினும் வழக்கமான எழுதுகோல் வழியிலான எழுத்துப்பணிகளை மேற்கொள்வது எழுத்திலக்கண அறிவை ஆழப்படுத்த உதவும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நிகழ்வுக் கட்டுரை, விளக்கக் கட்டுரை, விவாதக் கட்டுரை, கருத்துவிளக்கப்படம் அடிப்படையிலான கட்டுரை ஆகியவற்றிற்கு வழக்கமான எழுத்துவடிவிலானதும் கணினி சார்ந்த தட்டச்சிடும் முறையிலானதும் ஆகிய இரண்டுமே பொருத்தமாக அமையும். இவற்றோடு, உயர்தரம் 2&3 ஆகியவற்றில் பயிலும் மாணவர்கள் கவிதைகள், சிறுகதைகள் முதலான இலக்கியப் படைப்புகளை உருவாக்கும் முயற்சிகளுக்கு இத்தகைய எழுத்துப்பணிப் பயிற்சிகள் துணைபுரியும். மேலும், மாணவர் கற்றல் தளம், இருவழித் தொடர்புத்தளம் ஆகிய தளங்களில் வழங்கப்பட்டுள்ள செயற்கூறுகளின் துணைகொண்டு எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களை வளர்த்துக்கொள்ள மாணவர்களுக்குத் தக்க வகையில் ஆசிரியர்கள் வழிகாட்டி உதவ வேண்டும்.

எழுதுகோல் வழியிலான எழுத்துப்பயிற்சிக்கும் கணினி சார்ந்த எழுத்துப்பயிற்சிக்குமிடையே பேணப்படும் சமநிலையானது உயர்தரம் 2-இல் பயிலும் மாணவர்களிடையே கருத்துப்பரிமாறிக்கொள்ளும் திறன்களை வளர்ப்பதோடு, மொழியோடு சார்ந்துள்ள பண்பாட்டு விழுமியங்கள் குறித்த விழிப்புணர்வையும் வளர்க்க உதவும். தாய்மொழியில் கருத்துப்பரிமாறிக்கொள்ளும் திறனும் மொழிநுட்பங்களும் அம்மொழியைக்கொண்டு சமூகத்தோடு தொடர்பிணைப்பை வளர்த்துக்கொள்ளவும் வழிவகுக்கும்.

### இலக்கியப் பனுவல்களிலும் நடைமுறைக்கேற்ற உரையாடப் பனுவல்களிலும் தக்க அனுபவப் பயிற்சியளித்தல்

சிறந்த இலக்கியக்கூறுகளைத் தன்னகத்தே கொண்டு படிப்போரின் சிந்தனையைத் தூண்டும் இலக்கியப் பனுவல்களை அறிமுகப்படுத்தும் அதே வேளையில், அன்றாட வாழ்க்கையில் பயின்றுவரும் நடைமுறைக்கேற்ற உரைநடைப் பனுவல்களான, வலைப்பூப் பதிவுகள், செய்தித் துணுக்குகள், கருத்துக்களம், தலையங்கம், செய்தி விமர்சனம், கருத்துணர்பகுதிகள் முதலானவற்றிலும் மாணவர்களுக்குச் சம அளவு அனுபவப் பயிற்சியளிப்பது அவசியமாகும். இதன்வழி, அவர்களால் பல்வேறு வகைகளில் அமைந்துள்ள பனுவல்களைப் பரந்துபட்டநிலையில் படித்துணர இயலும்.

இலக்கியப் பனுவல்களில் ஆழமான வாசிப்பு அனுபவம் பெறும் மாணவர்கள் இயல்பாகவே பலதரப்பட்ட தமிழ் இலக்கியப் படைப்புகளை ஆர்வத்தோடு வாசிக்கும் பழக்கத்தைக் கைக்கொள்வார்கள். இதன்வழி மாணவர்களின் இலக்கியத் திறனாய்வுத் திறன்கள் வளம்பெறுவதோடு புத்தாக்கச் சிந்தனையும் மேம்படும். மேலும், அவர்களின் சுய விழிப்புணர்வும் சமூக விழிப்புணர்வும் மேம்படும். மேலும், தம் உணர்வுகளைப் பேச்சிலும் எழுத்திலும் வெளிப்படுத்தும் வகையில் கூருணர்வு சார்ந்த கூறுகளை மேம்படுத்திக்கொள்ளவும் இந்த வாசிப்புப் பழக்கம் உதவும்.

நடைமுறைக்கேற்ற உரைநடைப் பனுவல்கள் நடப்புச் செய்திகளில் ஒருவருக்குத் தக்க அனுபவ அறிவைச் சேர்த்துச் சமூக விழிப்புணர்வையும் உலக விழிப்புணர்வையும் வளர்க்கும். மேலும், நடைமுறைக்கேற்ற செய்திப் பனுவல்களையொட்டி விவாதிக்கும்போது ஒருவர் அதிலுள்ள தகவல்கள் குறித்து ஆழ்நிலை மதிப்பீட்டுத் திறனையும் பகுத்தாயும் திறனையும் மேம்படுத்திக்கொள்வர். மாணவர்கள் அனுபவத்திற்குட்பட்ட பனுவல்களில் காணப்படும் தகவல்களுள் உண்மைக் கருத்துகளையும், தனிப்பட்ட கருத்துரைகளையும், பொய்ச் செய்திகளையும் வேறுபடுத்திப் பார்க்கும் ஆற்றலைப் பெறுவர்.

இந்த இருவகைப்பட்ட பனுவல்களிலும் தொடர்ந்து மொழியனுபவப் பயிற்சிகள் பெறும்போது மாணவர்கள் சுய கற்றலை மேற்கொள்பவர்களாகவும் அக்கறையுள்ள குடிமக்களாகவும் மிகவும் துடிப்புடன் பங்களிப்பவர்களாகவும் உருவாவர்.

## பரந்துபட்ட மூன்று கருப்பொருள்களின் கண்ணோட்டத்தில் ஒருங்கிணைக்கப்படும் மொழிப்பாடம்

மொழித்திறன்களைத் தனித்துக் கற்பிக்க இயலாது. அவை மொழிச்சூழலின் அடிப்படையில் அமையப்பெறுதல் வேண்டும். இந்தப் புதிய பாடத்திட்டம் பரந்துபட்ட மூன்று கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்தக் கருப்பொருள்களின் துணைகொண்டு மாணவர்கள் மொழித்திறன்களில் தக்க பயிற்சிபெற்று அவற்றை ஒருங்கிணைக்கப்பட்ட நிலையிலும் அர்த்தமுள்ள வகையிலும் திறம்படப் பயன்படுத்த அறிந்துகொள்வர். மேலும், தாம் எதிர்நோக்கும் சிக்கல்களிலும் விவகாரங்களிலும் ஆழமான புரிந்துணர்வைப் பெற்று அவற்றை வேறுபட்ட கண்ணோட்டங்களில் அணுக அறிந்திருப்பர்.

குறிக்கப்பட்ட மூன்று கருப்பொருள்களின் அடிப்படையில் கற்றல் கற்பித்தல் வளங்கள் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும். உலகத்தில் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருப்பதால் கற்றல் கற்பித்தல் வளங்களிலும் தேவைக்கேற்ப மாற்றங்கள் இடம்பெற வேண்டுவது அவசியமாகிறது. பரந்துபட்ட கருப்பொருள்களில் மாற்றங்கள் இல்லாதபோதும் இடம், நேரம், சூழல் முதலானவற்றைக்கொண்டு கருத்தாக்க நிலையில் மாணவர்கள் மாற்றங்களைக் காண இயலும். இதன் அடிப்படை நோக்கம் தகவலையோ உள்ளடக்கத்தையோ சாராது. மாறாகக் கற்றலை மேம்படுத்துவதாகவே அமையும்.

பரந்துபட்ட மூன்று கருப்பொருள்களில் ஆழமான புரிந்துணர்வும் கண்ணோட்டமும் கொள்ளும்போதே இது சாத்தியமாகும். பரந்துபட்ட மூன்று கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்ட கலந்துரையாடல், மாணவர்களை ஆழமாகச் சிந்திக்கத் தூண்டும். அத்துடன் பரந்துபட்ட நிலையில் மாறுபட்ட கண்ணோட்டங்களைக் கைவரப்பெற உதவுவதோடு தொடர்புடைய சிக்கல்களை நுணுகி ஆராயும் திறன்களையும் அவர்களுக்குத் தரும்.

## இலக்கியக் கூறுகள்

இலக்கியத்தின் அடிப்படைத்திறன்கள் வெளிப்படையாகக் கற்பிக்கப்படல் வேண்டும். அவற்றைப் பரிந்துரைக்கப்படும் இலக்கியப் பனுவல்கள் வழியாகவோ பொருத்தமாக ஆசிரியர்கள் தேடிப்பெறும் பிற தெரிவுகளின் வழியாகவோ பாடச்சூழமைவைக்கொண்டு மாணவர்களை ஆராயச் செய்யலாம். இலக்கியம் கற்பித்தல் என்பது பல்வேறு இலக்கியக் கூறுகளான களம், கருப்பொருள், பாத்திரங்கள் என்பனவற்றோடு பனுவல்களில் கையாளப்படும் பல்வேறு இலக்கிய அணுகுமுறைகளையும் உத்திமுறைகளையும் பற்றிய ஆழ்ந்த புரிந்துணர்வையும், இலக்கியத்தை உணர்ந்து பாராட்டும் திறனையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

ஓர் இலக்கியப் படைப்பின் உள்நோக்கத்தை முழுமையாக உணர்ந்து இலக்கிய நயம் பாராட்டுவதற்கு அவ்விலக்கியத்தின் கதை, அதனை எழுதியவர், இலக்கியப் படைப்பின் பின்புலம் போன்றவற்றுடன் வாசகர் அனுபவங்களையும் தொடர்புபடுத்திக் கற்பிப்பது அவசியமாகும்.

**களம்**:

கதைக்களம் என்பது ஒரு படைப்பின் முக்கிய நிகழ்வுகளும் அவற்றுடன் தொடர்புடைய பிற நிகழ்வுகளும் நடக்கும் இடம், காலம் ஆகியவற்றை விளக்கும். இவை படைப்பின் நோக்கத்தை நன்கு புரிந்துகொள்வதற்குத் துணையாகும்.

**கருப்பொருள்**:

இலக்கியப் பனுவல்களின் சாரத்தைப் புரிந்துகொண்டு அப்படைப்புகளின் மையக் கருத்துகளையும், முக்கியச் சிந்தனைகளையும் ஆராய உதவுவது கருப்பொருளாகும். அது பனுவலின் மையப் பாடப்பொருளாகவும் கருத்தாகவும் அமைந்திருக்கும். இப்பாடத்திட்டத்தில் வரையறுக்கப்பட்டிருக்கும் மூன்று கருப்பொருள்கள் மட்டுமல்லாது அவற்றிலிருந்து வேறுபட்டுப் பிற பொருத்தமான கருப்பொருள்களின் அடிப்படையில் அமைந்த இலக்கியப் பனுவல்களையும் மாணவர்களுக்குக் கற்பிக்கலாம்.

**பாத்திரங்கள்**:

இலக்கியப் படைப்புக்கு மிகவும் முக்கியமானவை கதாபாத்திரங்கள். பாத்திரங்களின் மூலமாகவே கதைக்கரு வெளிப்படும். இலக்கியப் படைப்பில் இடம்பெறும் உயர்திணை, அஃறிணைப் பாத்திரங்கள் யாவற்றையும் ஊக்கம், அறிவுசார் நிலை, விழுமியங்கள், உணர்வுகள் முதலியவற்றின் அடிப்படையில் மதிப்பிட்டு ஆராய வேண்டும்.

**நடையும் அணுகுமுறைகளும்**:

எழுத்தாளர் ஒரு நோக்கத்துடன் கையாளும் அங்கதம், முரண், பாத்திர வார்ப்பு, குறியீடுகள், உயர்வு நவிற்சி (Hyperbole), முரண்தொடை (Oxymoron) முதலான உத்திகளை நல்ல முறையில் பயன்படுத்தி இலக்கியப் படைப்புக்குச் சிறப்புச் சேர்க்கும் எழுத்தாளரின் மொழிநடையை உணர்ந்து போற்ற வேண்டும்.

மேற்கூறப்பட்ட இலக்கியக் கூறுகளை அறிந்து பாராட்டுவதோடு, மாணவர்கள் சுயமாகவே கவிதைகள், சிறுகதைகள் முதலிய இலக்கியப் படைப்புகளை உருவாக்கிப் படைப்பதற்குத் தளங்கள் அமைத்து வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும். அப்போதுதான் வாசகர் நிலையிலிருந்து மேம்பட்டுப் படைப்பாளர் நிலையிலிருந்து இலக்கியப் படைப்புகளை மாணவர்களால் பார்க்க இயலும். இதுபோன்று அவர்களால் உருவாக்கப்படும் படைப்புகள் உயர்தரம் இலக்கியப் பாடத்தில் மதிப்பீட்டுக்கு உட்பட்டதாக இல்லாவிட்டாலும், இதுபோன்ற தளங்கள் கற்போரை ஊக்குவித்துப் பாடத்திட்டத்திற்கு அப்பாலும் கற்க ஊக்கமூட்டும்.

## <u>இலக்கிய வகைகள்</u>

தாய்மொழி இலக்கியப் பாடத்தைப் படிப்பது உயர்தரம் 2&3 மாணவர்களிடையே ஏற்ற ஒத்திசைவான களங்களையும் மனித உறவுகளையும் பற்றிய தெளிவை ஏற்படுத்துகிறது. தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிந்துரைக்கப்பட்ட நூல்களில் உள்ள கருப்பொருள்கள் தற்போதைய சூழலுக்குப் பொருத்தமானவையாகவும் பல்வேறு சமூக விழிப்புணர்வுக் கருத்துகளைக் கொண்டமைந்து மாணவரைச் சமூகத்தோடு தொடர்புபடுத்துவனவாகவும் உள்ளன. அந்த நூல்கள் மாறி வரும் உலகச் சூழலில் உலகளாவிய நிலையில் நிலைத்திருக்கும் பொருத்தமான கருப்பொருள்களைப்பற்றிய வளமான கலந்துரையாடலுக்கு இடமளிக்கும். அவை செழுமையான வரலாற்றையும் பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் பிரதிபலிப்பதுடன் மாணவர்களது அழகியல் உணர்வுகளை வளர்த்துப் பண்பாட்டைப் போற்றவும் வழிகோலும்.

<u>தேர்ந்தெடுத்துப் பரிந்துரைக்கப்பட்ட நூல்கள் கீழ்க்காணும் கூறுகளைக் கொண்டிருக்கும்:</u>

- வெவ்வேறு வரலாற்றுக் காலங்கள்முதல் தற்காலம்வரை உள்ள இலக்கிய நூல்கள் இடம்பெறும். அத்தகைய தெரிவுகளில் பழைய இலக்கியங்களுக்கும் தற்காலப் படைப்புகளுக்கும் இடையே போதிய சமநிலை பேணப்பட்டிருக்கும்.
- உள்ளூர்ப் படைப்புகளிலிருந்தும் சில படைப்புகள் இடம்பெற்றிருக்கும்.

- அவை பல்வேறு இலக்கிய வகைகளையும் செவ்வியல் இலக்கியங்களையும் சார்ந்தவையாக அமையப்பெற்றிருக்கும்.
- பலவிதமான களம், கருப்பொருள்கள், பாத்திரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் அமைந்திருக்கும்.

தேர்ந்தெடுத்துப் பரிந்துரைக்கப்பட்ட நூல்கள் இலக்கியத்தின் முக்கியக் கூறுகளை ஆராய்வதற்கும், பாத்திரப்படைப்பு, களம், வடிவம், சூழல், நோக்குநிலை, நடை ஆகியவற்றைக் கற்பதற்கும் வழிவகுக்கும். உருவகம், குறியீடு, முரண் போன்ற முக்கியமான இலக்கியக் கூறுகளைக் கற்கவும் பயன்படுத்தவும் அவை இடமளிக்கும்.

ஒவ்வொரு தாய்மொழிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கிய வகைகள் அந்தந்தத் தாய்மொழியின் தனித்துவத்துக்கும் இலக்கிய மரபுகளுக்கும் ஏற்பச் சற்று வேறுபடும். உயர்தரம் 3 வகுப்பில் படிக்கும் மாணவர்கள் இந்த வகைகளை மேலும் பரந்துபட்ட நிலையிலும் ஆழ்ந்தும் கற்பார்கள்.

| தாய்மொழி | பரிந்துரைக்கப்பட்ட இலக்கிய வகைகள் | பார்த்திராத பனுவல் வகைகள் |
|---|---|---|
| உயர்தரம் 2 - தமிழ் | கவிதைகள்<br>சிறுகதைகள்<br>நாடகங்கள்<br>நாவல் | மரபுக் கவிதைகள்<br>தற்காலக் கவிதைகள்<br>சிறுகதைகள் |

## பாடவேளை

ஈராண்டுகள் கற்பிக்கப்படும் உயர்தரம் 2 தமிழ்மொழிப் பாடத்திற்கு, ஒரு வாரத்திற்கு 4 மணி நேரப் பாடவேளைகள் பரிந்துரைக்கப்படுகின்றன. உயர்தரம் 3 தமிழ்மொழிப் பாடத்திற்கு, ஒரு வாரத்திற்கு 2 மணி நேரப் பாடவேளைகள் பரிந்துரைக்கப்படுகின்றன. மொழி, இலக்கியக் கூறுகளுக்கு ஒதுக்கப்பட்ட பாடவேளைகளைப் பள்ளிகள் தங்கள் விருப்பத்திற்கேற்பப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால், அவை வெறுமனே இலக்கியக் கூறுகளைக் கற்பிப்பதற்கு மட்டுமே பயன்படும்படியாக இருந்துவிடக்கூடாது. மொழி கற்பித்தலுக்கும் நேரத்தைச் சமநிலையில் ஒதுக்கி கற்பித்தல் வேண்டும்.

# இயல் 3

## பயிற்றுமுறைகள்

தாய்மொழிப் பாடக்கலைத்திட்டத்தின் முக்கியக் கூறுகளில் ஒன்று மொழி பயிற்றுமுறையாகும். தமிழ்மொழியைத் தாய்மொழிப் பாடமாகப் பயிலும் மாணவர்கள் அதை ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் கற்பதற்கு ஏற்ற வகையில் மொழி பயிற்றுமுறை கையாளப்பெற வேண்டும். இன்றைய மாறிவரும் மொழிச் சூழலில் இதில் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

### சிங்கப்பூர்க் கற்பித்தல் முறைமை - ஒரு பார்வை


வகுப்பறைகளில் தாய்மொழி கற்றல் கற்பித்தலைப் பயன்முனைப்புமிக்க வகையில் மேற்கொள்வதற்கு ஆசிரியர்கள் தங்கள் பயிற்றுமுறைகளைக் காலத்திற்கேற்பப் புதுப்பித்து மேம்படுத்திக்கொள்வது அவசியமாகும். இதற்குச் சிங்கப்பூர்க் கற்பித்தல் முறைமையை ஆசிரியர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். சிங்கப்பூர்ப் பாடக்கலைத்திட்டக் கோட்பாட்டையும் கற்பித்தல் கற்றலுக்கான கொள்கைகளையும் வழிகாட்டிகளாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சிங்கப்பூர்க் கற்பித்தல் முறைமையானது கற்பித்தலையும் கற்றலையும் எவ்வாறு பயனுள்ள வகையில் மேற்கொள்ளலாம் என்று விளக்குகிறது.

ஆசிரியர்கள் தாம் கற்பிக்கின்ற மொழியின் அடிப்படைகள் குறித்துத் தெளிவு கொண்டிருந்தால்தான் அவர்களால் மொழியை மாணவர்களிடம் எளிதில் கொண்டு சேர்க்க இயலும். குறிப்பாக, ஆசிரியர்களுக்குத் தாம் எதைக் கற்பிக்க வேண்டும் என்பதிலும் அதை எப்படிக் கற்பிக்க வேண்டும் என்பதிலும் நல்ல புரிந்துணர்வு இருந்தால் மாணவர்கள் நன்முறையில் மொழியறிவையும் மொழித்திறன் பயிற்சியையும் பெறுவர். ஆசிரியர்களின் வழிகாட்டுதலில் மாணவர்கள் பயன்முனைப்புமிக்க வகையில் தன்னம்பிக்கையோடு பாடப்பொருளறிவை ஆழமாகவும் உணர்ந்துகொள்வர். இது பாடத்தையொட்டிய ஆழமான கருத்தாய்வுச் சிந்தனையை வளர்த்து, மொழி ஈடுபாட்டை வளர்க்க உதவும். சிங்கப்பூர்க் கற்பித்தல் முறைமையில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் சிந்தனைத் திறன்களாலும் பொருத்தமான மனநிலைகளாலும் கற்றல் வளர்ந்து செழித்தோங்கும்.

கீழ்க்காணும் படத்தில் கொடுக்கப்பட்டுள்ள நான்கு கற்பித்தல் செயல்முறைகளையும் கற்பித்தல் கூறுகளையும் மாணவர்களுக்குத் தக்க கற்றல் அனுபவங்களை வடிவமைத்துத் தருவதற்கு ஏதுவாக ஆசிரியர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். இந்தக் கற்பித்தல் கூறுகளுக்கும் செய்முறைகளுக்கும் இடையேயுள்ள தொடர்புகள் சிங்கப்பூர்க் கற்பித்தல் முறைமையில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

இந்த இயலில் உள்ள மற்ற பகுதிகள் மொழிப் பாடம், இலக்கியப் பாடம் ஆகியவற்றிற்குரிய பயிற்றுமுறைகளையும் கற்பித்தல் கருவிகளையும் ஆசிரியர்களுக்கு அறிமுகம் செய்கின்றன.

**நான்கு கற்பித்தல் செயல்முறைகளும் கற்பித்தல் கூறுகளும்**




## <u>மொழித்திறன்களையும் இலக்கியப் பகுப்பாய்வையும் ஒருங்கிணைத்தல்</u>

மொழிக்கும் இலக்கியத்திற்கும் சம அளவு முக்கியத்துவம் கொடுத்துக் கற்பிக்க வேண்டும் என்பதை இப்பாடத்திட்டம் வலியுறுத்துகிறது. உறவு, மாற்றம், தெரிவு ஆகிய மூன்று பரந்துபட்ட கருப்பொருள்களைக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பாடத்திட்டமானது கற்பித்தல் பயிற்றுமுறைகளில் காலத்திற்கேற்ற மாற்றத்தைக் கொண்டுவர விழைகிறது. ஆசிரியர்கள் மொழித்திறன்களையும் இலக்கியப் பகுத்தாய்வுத் திறன்களையும் தனித்தனிக் கூறுகளாகக் கற்பித்தாலும் அவற்றின்மூலம் மாணவரிடையே மொழி ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

மாணவர்களிடையே கருத்துணர்திறனை வளர்க்கவும் பனுவல்களுக்கும் கருப்பொருள்களுக்கும் இடையே உள்ள தொடர்பை அறியும் திறனை வளர்க்கவும் ஆசிரியர்கள் தங்களது கற்றல் வளங்களை ஒழுங்குபடுத்தியும் மாற்றியமைத்தும் கற்பிக்க வேண்டும் என்பது பெரிதும் வலியுறுத்தப்படுகிறது.


பின்னிணைப்பு 3-இல் வழங்கப்பட்டுள்ள பட்டியல் மேற்குறிப்பிட்டுள்ள கருப்பொருள்களின் அடிப்படையில் வழிகாட்டும் வினாக்களையும் கலந்துரையாடலுக்கான தலைப்புகளையும் தயாரிக்க ஆசிரியர்களுக்கு உதவும்.

## வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல்

வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் என்பது மாணவர்களின் மாறுபட்ட மொழிப் பின்னணியையும் மொழியாற்றலையும் தயார்நிலையையும் கருத்திற்கொண்டு கையாளப்பெறுகின்ற கற்பித்தல் அணுகுமுறையாகும். இது மாணவர்களை மையமாகக்கொண்டே இயங்குகிறது.

### எவற்றின் அடிப்படையில் வேறுபடுத்தலாம்?

மொழி கற்றலில் மாணவர் ஒவ்வொருவரும் தங்கள் தயார்நிலை, நாட்டங்கள், பின்புலம், கற்றல் தேவைகள், இயல்புகள் முதலியவற்றின் அடிப்படையில் வேறுபடுகின்றனர். ஆசிரியர் இவற்றைக் கவனத்திற்கொண்டு அவற்றிற்கு ஏற்றவாறு கற்பித்தலைத் திட்டமிட்டு மேற்கொள்வது அவசியம்.



## தயார்நிலை

பாடத்திட்டத்தின் எதிர்பார்ப்புக்கு ஏற்புடைய வகையில் மாணவரின் பின்புல அறிவும் பாடப் புரிந்துணர்வும் திறன்களும் அமையப் பெற்றிருக்கும் நிலையையே தயார்நிலை குறிக்கிறது. தயார்நிலை என்பதை மாணவரின் ஆற்றலோடு ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. தயார்நிலையை எட்டாத மாணவர்களுக்குத் தாங்கள் கற்றலில் கவனம் செலுத்த வேண்டிய கூறுகளையும் மேம்பாட்டுக்குரிய வழிமுறைகளையும் அறிந்துகொள்ள ஆசிரியரின் உதவியும் வழிகாட்டுதலும் பெரிதும் தேவைப்படும். ஆசிரியரோடு சக மாணவர்களும் இவ்வகையில் உதவலாம். ஆசிரியர் இத்தகைய மாணவர்களின் கற்றல் இடைவெளியைச் சரிசெய்ய அவர்களுக்கேற்ற வகையில் கற்பித்தல் நடவடிக்கைகளை வடிவமைப்பதோடு கற்றல் பணிகளையும் உருவாக்கலாம். பனுவலை வாசித்துக் கருத்துணரும் திறன்முதல் பல்வேறு இலக்கியக் கூறுகளைக் கற்கும்வரை ஆசிரியரின் வழிகாட்டுதல் இவர்களுக்குத் தேவைப்படலாம். மாறாக, நன்கு திறம்படைத்த மாணவர்களுக்கு அவர்களின் மொழித்தேவைக்கும் ஈடுபாட்டிற்கும் ஏற்புடைய வகையில் பொருத்தமான கூடுதல் நடவடிக்கைகளை ஆசிரியர் திட்டமிடவும் வேண்டும்.

## நாட்டம்


நாட்டம் என்பது குறிப்பிட்ட பாடத்திலோ திறனிலோ தம் அறிவாற்றலையும் பற்றுதலையும் வளர்த்துக்கொள்ள மாணவர் காட்டும் ஆர்வத்தைக் குறிப்பதாகும். சான்றாகத் தாம் படிக்கும் பனுவலில் வரும் கதைமாந்தரின் பண்புநலன்களைத் தம்மோடு ஒப்பிட்டுப் பார்ப்பது; அல்லது பனுவலில் ஆளப்படும் கருப்பொருளை ஆழமாக அறிந்துகொள்ள ஆர்வங்காட்டுவது; அல்லது வரலாற்றுப் பிண்ணனியில் அமையப்பெற்ற கதையைப் பகுத்தாய விரும்புவது என மாணவரின் நாட்டம் பலவாக விரிவடையவும் வேறுபடவும் கூடும். மாணவர்கள் சிலர் வெவ்வேறு இலக்கியக் கூறுகளை ஆராய்ந்து அவற்றைப்போல படைப்புகளை உருவாக்கவும் விரும்பலாம். இவையெல்லாம் பலவிதமான நாட்டங்களின் பல்வேறு வடிவங்களாகும்.

## கற்பவர் தன்மையும் பின்புலமும்

ஒரு மாணவரால் எந்தெந்த முறைகளில் கற்றுக்கொள்ள இயலும் என்பதை அவரது கற்றல் பின்புலம் காட்டும். இது ஒரு மாணவரின் பாலினம், இயல்பு, கற்றல் பாணி, கற்றல் நோக்கம் முதலியவற்றைப் பொருத்து அமையும். உதாரணத்திற்கு ஒருவர் சுய கற்றலில் ஈடுபட்டு எழுத்துவழிக் கருத்துப்பரிமாறிக்கொள்வதில் ஆர்வம் கொண்டிருப்பார். மற்றொருவர் கூடிக்கற்றலில் ஈடுபட்டு விவாதமேடைகளிலும் கருத்தாடலிலும் பங்கேற்க முனைவார். சிலருக்கு ஒரு பனுவலைப் படித்து அதைப் பகுத்தாய்வு செய்யப் பிடிக்கும். மற்றவர்கள் அதே பனுவலைப் படித்துவிட்டு அதைப் போன்று சுய படைப்புகளைப் புத்தாக்கச் சிந்தனையோடு புனைய முயல்வர். மாணவர்கள் சிலர் தங்கள் கருத்துகளை மற்றவர் முன்னிலையில் படைக்க விரும்புவர். வேறு சிலர் இலக்கியப் படைப்புகளால் ஈர்க்கப்பட்டு பெருமுயற்சிகொண்டு தங்களது இலக்கியத் திறன்களை மேம்படுத்திக்கொள்ள முயல்வர்.

# எவற்றை வேறுபடுத்தலாம்?

ஆசிரியர்கள் தம் மாணவர்களின் கற்றல் தேவைகளுக்குப் பொருந்துமாறு பாடப்பொருள், கற்பித்தல் செயற்பாடு, கற்றல் வெளிப்பாடு முதலானவற்றை வேறுபடுத்தி மொழி கற்பித்தலை அமைத்துக்கொள்ள வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் நன்முறையில் வழிகாட்டும். இவற்றோடு, கற்றலுக்கு அவசியமான தேவைகளாகக் கருதப்பெறும் கற்றல் சூழலையும், தொடர் மதிப்பீட்டு நடவடிக்கைகளையும், நெகிழ்வுத்தன்மைகொண்ட குழு அமைப்புமுறையையும் கருத்திற்கொள்ள வேண்டும். இவற்றைத் தம் கற்பித்தலுக்குச் சிறப்பாக அமைத்துக்கொள்ளும் முயற்சியே வேறுபடுத்தப்பட்ட கற்பித்தலின் பயனாகும்.




## பாடப்பொருள்

மாணவர்கள் எதைக் கற்க வேண்டும், எத்தகைய மொழியறிவைப் பெற வேண்டும் என்பதை முடிவு செய்வது பாடப்பொருளாகும். ஆசிரியர் திட்டமிடும் பாடப்பொருளுக்கு ஏற்ற கற்பித்தல் வளங்களைத் தயாரித்துக்கொள்வார். மாணவர்களின் மொழியறிவுக்கும் கற்றல் அனுபவத்துக்கும் ஏற்புடையவாறு ஆசிரியர்கள் வேறுபடுத்திக் கற்பிக்கலாம். குறிப்பாக, அச்சு வளங்களிலும், அச்சு அல்லாத பிற வளங்களிலும் அமையப்பெற்றுள்ள பாடப்பொருள்களை மாணவர்களின் கற்றல் தேவைகளுக்கேற்ப வேறுபடுத்திக் கற்பிக்கலாம்.

## செயற்பாடு

மாணவர்களைப் பயன்முனைப்புமிக்க வகையில் கற்றலில் ஈடுபடுத்துதற்கு ஆசிரியர்கள் தகுந்த கற்றல் செயற்பாடுகளை வடிவமைத்துக்கொள்ள வேண்டும். ஒரே பாடப்பொருளைப் பல்வேறு கற்றல் திறன்களைக்கொண்ட மாணவர்களின் தேவைகளுக்கேற்ப ஆசிரியர்கள் வேறுபடுத்த வேண்டுவது அவசியமாகும். வெவ்வேறு வகுப்பாயினும் ஒரே வகுப்பாயினும் மாணவர்கள் ஒவ்வொருவரின் கற்றல் தேவையை மனத்திற்கொண்டு ஆசிரியர் மொழி நடவடிக்கைகளை மாற்றி அமைக்கலாம். மாணவரின் கற்றல் பின்புலம், கற்றல் பாணி, நாட்டம் முதலானவற்றிற்கு ஏற்ப இந்த மாற்றங்களைச் செய்துகொள்வது கற்றலில் பெரும் பயன்களைக் கொண்டுவந்து சேர்க்கும்.

## வெளிப்பாடு


மொழி நடவடிக்கைகளின் வழியே மாணவர்களுக்குத் தங்கள் கற்றலை வெளிப்படுத்துதற்கும் சரிபார்ப்பதற்கும் தக்க வாய்ப்புகளை ஆசிரியர் உருவாக்கித் தருதல் வேண்டும். இது கற்றல் கற்பித்தலில் முக்கியப் படிநிலையாகும். கற்றலை வெளிப்படுத்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விதமான வழிமுறையை ஆசிரியர் கடைப்பிடிப்பது பல சிக்கல்களை உருவாக்கக்கூடும். வேறுபட்ட மதிப்பீட்டு நடவடிக்கைகளைக்கொண்டு மாணவர்களுக்குத் தங்கள் கற்றலை வெளிப்படுத்த ஆசிரியர்கள் வாய்ப்புகளை வழங்கலாம். நிர்ணயிக்கப்பட்ட கற்றல் அடைவுநிலைகளை மனத்திற்கொண்டு அவற்றுக்குத் தக்கவாறு பல்வேறு மதிப்பீட்டு நடவடிக்கைகளை ஆசிரியர் மேற்கொள்ளலாம்.

வேறுபடுத்தப்பட்ட வெளிப்பாட்டு நடவடிக்கைக்கான சில எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- ஓர் இலக்கியப் பனுவலையொட்டி எழுத்துப் படைப்பு, வாய்மொழிப் படைப்பு அல்லது வேறு ஏதேனும் வடிவங்களில் படைப்புகளை உருவாக்கலாம்.
- பரிந்துரைக்கப்பட்ட நூல்களின் எழுத்தாளர்களுடைய மற்றப் படைப்புகளைப் பகுத்தாய்வது. (படத்தொகுப்பு, வாய்மொழிப் படைப்பு, எழுத்துப் படைப்பு)
- இலக்கியப் பனுவலில் இடம்பெறும் குறிப்பிட்ட கதைக்கருவையொட்டி நாடகம், ஒளிக்காட்சிப் படைப்பு, பாத்திரமேற்று நடித்தல் முதலானவற்றின்மூலம் தம் கற்றல் வெளிப்பாட்டை உணர்த்துவது.

## அடிப்படைக் கோட்பாடுகள்

வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் அணுகுமுறை ஐந்து அடிப்படை நெறிமுறைகளைக்கொண்டு இயங்குகிறது.



## சிந்தனையைக் காட்சிப்படுத்தும் உத்திமுறை (Making Thinking Visible)

இலக்கியப் படிப்பு என்பது நூல்களை ஆழமாகப் படித்துக் கருத்தாயும் ஒரு செயல்முறையாகும். மாணவர்கள் பனுவல்களின் உருவாக்கத்தில் இடம்பெற்றிருக்கும் பல்வேறு கூறுகளையும் சூழல்களையும் அடையாளங்காண அறிந்திருக்க வேண்டும். அதோடு இந்தப் பனுவல்களில் சொல்லப்படும் செய்திகளைத் தங்கள் சொந்த அனுபவங்களோடு பொருத்திப்பார்க்கும் திறனையும் பெற்றிருக்க வேண்டும். சுருங்கக்கூறின், மாணவர்கள் அறிவுபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் பனுவல்களுடன் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். பனுவலை ஆராயும்போது அதனையொட்டித் தரமான வினாக்கள் எழுப்பப்படுவது மாணவர்களின் சிந்தனையைக் காட்சிப்படுத்த உதவுகிறது; மாணவர்களின் பாடப் புரிந்துணர்வையும் மேம்படுத்துகிறது.

மேலும், தாய்மொழியில் மாணவர்களின் செயல்திறனையும் பயன்முனைப்புமிக்க கருத்துப்பரிமாற்றத்தையும் அது வலுப்படுத்துகிறது. தரமிக்க வினா எழுப்பும் உத்திமுறையானது மாணவர்கள் வெவ்வேறு கண்ணோட்டங்களின் வழியே தங்கள் கருத்துருவாக்கத்திற்கும் பொருள் விளக்கத்திற்கும் அறிவார்ந்த மதிப்பீட்டிற்கும் வழிகாட்டி உதவும். எனவே, ஓர் இலக்கியப் பனுவலைப்பற்றிய மாணவர்களின் புரிந்துணர்வை ஆழப்படுத்த ஆசிரியர்கள் பல்வேறு வழிகளில் வினாக்களை வடிவமைத்துப் பயன்படுத்தலாம்.

பின்னிணைப்பு 3-இல் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டும் வினாக்களைத் துணையாகக்கொண்டு ஆசிரியர்கள் சிந்தனை வழக்காறுகளைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள். வழிகாட்டும் வினாக்களைத் தொடர்ந்து பயன்படுத்துவது மொழி கற்றலுக்கும் இலக்கியக் கற்றலுக்கும் பெரிதும் உதவும். இது அடிப்படை சிந்தனைத் திறன்களைக் கண்டறிந்து அறிவாற்றலை வெளிக்கொணர உறுதுணையாக அமையும்.

எ-டு:

கண்ணோட்டங்களில் வட்டம் (Circle of Viewpoints) என்னும் உத்திமுறை பல கண்ணோட்டங்களைக்கொண்டு சிக்கல்களை ஆராயும் ஆதார நடவடிக்கையாக அமைகிறது. ஆசிரியர் இந்த உத்திமுறையை நாடகப் பாணியில் பயன்படுத்தி அடிப்படை இலக்கிய மரபுகளை விளக்கிக் கற்பித்து மாணவர்களுக்கு வழிகாட்டலாம். இந்த உத்திமுறையில், மாணவர்கள் நடிகர்களாக மாறி, அந்தக் கதாபாத்திரத்தின் தன்மைகளை ஏற்றுத் தமது கருத்துகளை வெளிப்படுத்துவர். மாணவர்கள் முடிவெடுப்பதற்குமுன் பகுத்தாய்தல், உய்த்துணர்தல், ஒருங்கிணைத்தல் முதலானவற்றைச் செயல்வழியே அறிந்துகொள்வர்.

சிந்தி-இணை-பகிர்(*See-Think-Wonder*), சூம்-இன்(*Zoom-In*), ஸ்டெப்-இன்சைட்(*Step-Inside),* தலைப்புச்செய்திகள்*(Headlines)* முதலான பிற உத்திமுறைகளும் மொழிப் பாடத்திற்கும் இலக்கியப் பாடத்திற்கும் பொருத்தமானவை. திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டு, மாணவர்கள் கூறப்படும் செய்தியை உற்றுநோக்கி விவரிக்கலாம்.

துறைகளுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்தியும் ஆதாரங்களுடன் காரணம் காட்டியும் விளக்கலாம். இவற்றிலுள்ள சிக்கலை ஆழமாகக் கண்டறிந்தும் விளக்கலாம்.

மொழி, இலக்கிய வகுப்பறைகளில் சிந்தனையைக் காட்சிப்படுத்துவதன்வழியே, மாணவர்களைத் துடிப்புமிக்க வாசகர்களாகவும் எழுத்தாளர்களாகவும் வாய்மொழித் திறனாளர்களாகவும் உருவாக்கலாம்.

## மின்னியல் சார்ந்த பயிற்றுமுறைகளின் பயன்பாடு

## (The Use of E-Pedagogies)

தற்கால வகுப்பறைகள் பன்முனைப்பாங்குடன் பல்வேறு தேவைகளை உள்ளடக்கியனவாக இயங்கி வருகின்றன. இந்நிலையில் மாணவர்களின் வேறுபட்ட கற்றல் தேவைகளை நிறைவேற்றும் வகையில் தமிழ்மொழியில் கற்றல் கற்பித்தல் நடைபெறுவது அவசியம். மின்னிலக்கத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பப் பயன்பாடும் ஒருங்கிணைந்த கற்பித்தல் முறைமைகளும் மாணவர்களின் கற்றல் அனுபவங்களை வளப்படுத்தித் துடிப்புமிக்க வகுப்பறைகளை உருவாக்குகின்றன.

பயன்முனைப்புமிக்க மின்னியல் சார்ந்த பயிற்றுமுறையானது படங்கள், ஒலி, ஒளிக்காட்சிகள், பனுவல்கள் முதலிய வளங்களின் வாயிலாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இலக்கியம் சார்ந்த வளமான அனுபவங்களைக் கொண்டு சேர்க்கிறது. இது மரபுசார் கற்றலில் வலியுறுத்தப்படும் பல்வேறு இலக்கியம் சார்ந்த புரிந்துணர்வையும் மாறுபட்ட சிந்தனை நோக்குகளையும் ஒருசேர இணைத்து வழங்குகிறது.

உதாரணத்திற்கு, ஆசிரியர்கள் ஒலி-ஒளி சார்ந்த பல்வேறு தொழில்நுட்ப வளங்களான பாடல் காட்சிகள், படங்கள், ஆவணப்படங்கள், ஊடக நேர்காணல்கள் முதலியவற்றைப் பயன்படுத்தி மாணவர்களைச் சுலபமாக இலக்கிய உலகத்திற்கும் அது சார்ந்த கலந்துரையாடலுக்கும் இட்டுச்செல்லலாம். மாணவர் ஒருவர் தமது கருத்துகளையும் எண்ணங்களையும் மற்ற மாணவர்களிடம் பகிர்ந்துகொள்ள, மாணவர் கற்றல் தளம் முதலான பொதுக் கற்றல் தளங்கள் பயன்படுகின்றன. அவ்வாறு பகிர்ந்துகொள்ளப்படும் கருத்துகள் தொடர்பான சக மாணவர்களது பார்வையைத் திறனாய்வு மூலமாகமோ, கருத்து விவரிப்பு மூலமாகவோ தெரிவிப்பதன் வாயிலாக இருவழிக் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபட இத்தகைய கற்றல் தளங்கள் பயன்படுகின்றன. இன்று கிடைக்கப்பெறும் பலதரப்பட்ட இணையத்தளக் கருவிகள் மாணவர்கள் புத்தாக்கச் சிந்தனையோடு தங்களது படைப்பாக்கத் திறனை வெளிக்கொணர வாய்ப்பளிக்கின்றன.

மாணவர்கள் தேர்வுநோக்கு வரையறைகளுக்கும் அப்பால் பரந்துபட்ட வாசிப்புப் பழக்கத்தை ஆர்வத்துடன் வளர்த்துக்கொள்ள வேண்டும். மாணவர்கள் பார்த்திராத பனுவல்களிலும் பாடப்பகுதிக்கு அப்பாற்பட்ட இலக்கியப் பனுவல்களிலும் உள்ள இலக்கியக் கூறுகளைப் பகுத்தாய்வு செய்யும் திறன்களைப் பெறச் செய்வது இப்பாடக்கலைத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஆசிரியர்கள் மாணவர்களுக்காக இணைய வாசிப்புச் சமூகமொன்றினை உருவாக்கி, அதில் வேறுபட்ட இலக்கிய வகைகளை அறிமுகப்படுத்தி அவர்களது இலக்கியத் தேடலை வளர்க்கலாம்.

மாணவர்களை இணையக் கலந்துரையாடல்களிலும் இருவழிக் கருத்துப்பரிமாற்றங்களிலும் கலந்துகொள்ள ஊக்குவிக்கலாம். அவர்கள் வாசிக்கும் இலக்கியப் பனுவலோடு அவர்களது சுய அனுபவங்களைத் தொடர்புபடுத்திப் பார்க்கத் தூண்டவேண்டும். பிறகு, அதுதொடர்பான கலந்துரையாடல்களில் மாணவர்களை ஈடுபடுத்துவதும் அவசியம். இவ்வாறான கலந்துரையாடல்களும் பதிவுகளும் குழுநிலையிலோ சுயமாகவோ அமையலாம். இவை இலக்கியப் படைப்புகளையொட்டிய சிந்தனையைத் தொடர்ந்து வளர்க்க உதவும். இத்தகைய செயற்பாடுகள் மாணவர்களது அறிவுசார், மொழிசார் மேம்பாட்டிற்கு வழிவகுக்கும். அதற்கு ஏற்ற வகையில் மாணவர் கற்றல் தளத்தில் மாணவர்கள் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொள்வதற்கு உகந்த சூழலை அமைத்துத் தரலாம்.

மாணவர்கள் சுயமாகவும் சக மாணவர்களுடன் இணைந்தும் ஆக்ககரமாகப் பொருளை உணர்ந்து கற்கிறார்கள். அவர்களது சுய கற்றலுக்கு வழிவகுக்கும் கூறுகளையும், ஏனைய கற்றல் தேவைகளை நிறைவேற்றக்கூடிய வசதிகளையும் கொண்டதாக மாணவர் கற்றல் தளம் இயங்குவதால், அது வேறுபடுத்தப்பட்ட கற்றல் கற்பித்தலுக்கும் வழிவகுக்குகிறது. இணையம் சார்ந்த கற்றல் சூழலில், மாணவர்களுக்குத் தேவையான வசதிவாய்ப்பும் நேரமும் கிடைக்கின்றன. இது அவர்கள் தங்களது எண்ணங்களைச் சீரமைத்துக்கொள்வதற்கும் கருத்துகளை அறிவுபூர்வமாக வெளிப்படுத்துவதற்கும் வாய்ப்பை வழங்குகிறது. இது தயக்கமின்றித் தங்கள் கருத்துகளைப் பிறரிடம் எடுத்துரைக்கவும் பகிர்ந்துகொள்ளவும் மாணவர்களுக்குப் பேருதவி புரிகிறது. அதோடு, தகவல்தொடர்புத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு வகுப்பறைக்கு அப்பாலும் தங்களது கருத்துத்தெரிவிப்பைத் தொடர்ந்து தெரிவிக்க ஆசிரியர்களுக்கு வாய்ப்பளிக்கிறது.

# இயல் 4

## மதிப்பீடு

### மதிப்பீட்டின் நோக்கம்


மதிப்பீடு என்பது கற்றல் செயற்பாட்டில் பிரிக்கவியலாத முக்கியக் கூறாகும். அது பாடக்கலைத்திட்டக் குறிக்கோள்களோடும், பாடப்பொருளோடும், பயிற்றுமுறையோடும் மிக நெருங்கிய தொடர்புடையது. கற்றல் கற்பித்தலில் முழுமையான மதிப்பீடு பெரிதும் வலியுறுத்தப்படுகிறது.

இது மாணவர்களின் பின்புலம், கற்றல் தேர்ச்சிநிலை போன்றவற்றைக் கண்டறியவும் பாடத்திட்டத்தின் கற்றல்விளைவுகளை மாணவர்கள் எந்த அளவு அடைந்துள்ளனர் என்பதைக் கண்டறியவும் பயன்படும். மதிப்பீட்டின் வழியே நாம் திரட்டும் தரவுகள் கற்றலைப்பற்றி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கு உரிய வகையில் பயன்மிக்க தகவல்களைத் தெரிவிக்க உதவிடும்.

மதிப்பீடு தரவுகளின் உண்மைத்தன்மையை உணர்த்துவதோடு தொடர்ந்து இயங்கும் தன்மை கொண்டது. அது ஆசிரியர்களுக்கு மாணவர்களின் தயார்நிலை, ஆர்வநிலை, கற்றலுக்கான அணுகுமுறை போன்றவற்றையொட்டிய தகவல்களைத் தந்து உதவும். ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் யாவும் மாணவரின் கற்றலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். மேலும், ஆசிரியரின் பாட நடத்துமுறையாக்கத்தை மேம்படுத்திக்கொள்ளத் தக்க வழியில் வழிகாட்ட வேண்டும். மாணவர்கள் பாடத்தைக் கற்றுக்கொண்டார்களா என்பதை அறியவும் பாடப்பொருளை எந்த அளவுக்குப் புரிந்துகொண்டார்கள் என்பதில் தெளிவு காணவும் மதிப்பீடு நன்முறையில் உதவிடும்.

மாணவரின் கற்றல் வளர்ச்சி குறித்தும் மேம்பாடு குறித்தும் தொடர்ச்சியாகத் தரநிலையிலும் அளவெண்ணிக்கை நிலையிலும் போதுமான தரவுகளைச் சேகரிப்பதை ஆசிரியர் வழக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். அவற்றிலிருந்து பெறப்படும் தகவல்கள் எதிர்காலத்திற்குரிய கற்றல் கற்பித்தல் நடைமுறைகளை வடிவமைக்க உதவிடும்.

# மதிப்பீடு - சிங்கப்பூர் கற்பித்தல் முறைமையில் உள்ள ஒரு கற்பித்தல் செயல்முறை





மதிப்பீட்டுக் கொள்கைகளும் பயிற்றுமுறைகளும் சிங்கப்பூர்க் கற்பித்தல் முறைமையின் கற்பித்தல் செயல்முறைகளில் பிரதிபலிக்கின்றன. அவை மதிப்பீட்டையும் கருத்துத்தெரிவிப்பையும் உள்ளடக்கிய கற்பித்தல் செயல்முறைகளாகும். மாணவரது புரிந்துணர்வைச் சோதித்து அதற்கேற்ற கருத்துத்தெரிவிப்பை வழங்குதல், மாணவரது சுய கற்றலுக்கு ஆதரவளித்தல், பயன்முனைப்புமிக்க ஒப்படைப்புகளை வழங்குதல் ஆகியவை இவற்றுள் அடங்கும்.

இவற்றைத் தவிரக் கற்பித்தல் செயல்முறைகளில் உள்ள பிற கூறுகளான பாடத்தயாரிப்பு, மதிப்பீடு தொடர்பான நடவடிக்கைகள் முதலியவற்றையும் கொண்டிருக்கும். ஆகையால், மதிப்பீடு கருத்துத் தெரிவிப்புக்கு மட்டுமல்லாமல் மற்றக் கற்பித்தல் செயல்முறைகளுக்கும் பொருந்தும்.

## கற்போரை மையப்படுத்துதலும் சமச்சீர் மதிப்பீடும்

பாடம் நடத்துமுறையாக்கத்தில் ஆசிரியர்கள் கற்போரை மையப்படுத்தும் சமச்சீர் மதிப்பீட்டு முறையை மேற்கொள்ள வேண்டும். இதில் கற்றலுக்கான மதிப்பீடு, கற்றலை மதிப்பிடுதல் ஆகிய இரண்டும் இடம்பெறல் வேண்டும்.




கற்போரை மையப்படுத்துதலும் சமச்சீரான மதிப்பீடும் மூன்று முக்கியச் செய்திகளின் அடிப்படையில் வழிநடத்தப்படுகின்றன.

### 1. மதிப்பீடு கற்றல் செயற்பாட்டில் பிரிக்கவியலாத கூறாகும்

மதிப்பீடு பாடத்திட்டத்தின் கற்றல் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் மாணவர்களைக் கற்றலுக்கு ஊக்கப்படுத்தும் தொடர் செயல்முறையாகும். கற்றல் கற்பித்தலின் ஊடே மதிப்பீடு தொடர்பான தகவல்களைச் சேகரிப்பது தொடர்நிகழ்வாக இடம்பெறும் கூறாகும். மாணவரது திறன் வளர்ச்சி தொடர்பான சரிபார்ப்புப் பட்டியலை உருவாக்குதல், வகுப்புத் தேர்வுகள், தேசியநிலைத் தேர்வுகள் முதலான நடவடிக்கைகளின் வழியே மதிப்பீடு நிகழும். மாணவரின் கற்றல் தேவைகளுக்கேற்ப இந்தக் கற்றல் முறை அமைந்து கல்வியின் விரும்பத்தக்க விளைவுகளை நிறைவேற்றும்.

### 2. மதிப்பீடு தெளிவான நோக்கத்தைக் கொண்டு மேற்கொள்ளப்படும்


மதிப்பீடு கல்விக்கொள்கையை மையப்படுத்திய தெளிவான நோக்கத்தை உடையது. எதை மதிப்பீடு செய்வது, எவ்வாறு மதிப்பீடு செய்வது ஆகிய தெளிவான நோக்கத்துடன் அது

இயங்க வேண்டும். சமச்சீர் மதிப்பீடானது கற்றலுக்கான மதிப்பீடு, கற்றலை மதிப்பிடுதல் ஆகிய இரண்டு வகைகளைக் கொண்டுள்ளது. முறைசாரா மதிப்பீடானது கற்றல் கற்பித்தல் முறைகளை மேம்படுத்த உதவும். முறைசார்ந்த மதிப்பீடானது மாணவர்களின் பாடப்பொருளறிவு, திறன் ஆகியவை குறித்த கற்றல் அடைவுநிலைகளைப்பற்றிய தகவல்களை வழங்குவதாக அமையும்.

### 3. மதிப்பீட்டுத் தகவல்களைத் திரட்டுவது எதிர்கால முறைமைகளுக்குத் துணைபுரிதல் வேண்டும்

பள்ளிகளில் நடத்தப்படும் மதிப்பீடானது மாணவர்களின் செயற்பாட்டின் அளவையும் தரத்தையும் நமக்குத் தெரிவிக்கிறது. எதிர்காலத்திற்கு வேண்டிய கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளை மேம்படுத்திக்கொள்ள இது உதவுகின்றது. மாணவர்களின் சுயமான கற்றலுக்கு மதிப்பீடு உதவுகிறது. தரமான வகையில் அமையப்பெற்ற பலவகையான மதிப்பீட்டு நடவடிக்கைகள் மாணவர்களின் பல்வேறு வகையான கற்றலுக்கும் முன்னேற்றத்திற்கும் வழிகாட்டுகின்றன.

கற்போரை மையப்படுத்தும் மதிப்பீட்டு நடைமுறைகளில் கற்றலுக்கான மதிப்பீடு, கற்றலை மதிப்பிடுதல் ஆகிய இரண்டுக்கும் இடையே சமச்சீரான நிலையைக் கொண்டிருக்க வேண்டும். அதைப் பின்வருமாறு விளக்கலாம்.



**கற்றலுக்கான மதிப்பீடு** என்பது கற்றல் கற்பித்தலுக்கு ஆதரவளிக்கும் மதிப்பீடாகவும் மாணவர்களை மையமாகக்கொண்ட கற்றல் முறைகளை வலியுறுத்துவதாகவும் விளங்குகிறது. இம்மதிப்பீட்டில் ஆசிரியர்கள் மாணவர்களது கற்றலில் ஏற்படும் இடைவெளிகளை அடையாளங்கண்டு கற்றலில் மேம்படுவதற்கான கருத்துகளைத் தெரிவிப்பர். முறைசாரா மதிப்பீடு**,** மாணவர்கள் தமது கற்றல் இலக்குகளை நோக்கிச் செல்வதை உறுதிசெய்கிறது. மேலும்**,** எதிர்பார்க்கப்பட்ட கற்றல் விளைவுகளை மாணவர்கள் அடையவும் வழிவகுக்கிறது.

முறைசாரா மதிப்பீடு**,** "மாணவர்கள்**,** ஆசிரியர்கள்**,** சக மாணவர்கள் அனைவரும் அன்றாடம் பயன்படுத்தும் ஒன்று. அவர்கள் கற்றலையொட்டிய செய்திகளைத் தேடியும் அது குறித்து ஆழ்ந்து யோசித்தும் கலந்துரையாடியும் அதைச் செயற்படுத்தியும் கண்காணித்தும் தங்கள் தொடர்ச்சியான கற்றலை அவ்வப்போது மேம்படுத்திக்கொள்கிறார்கள்." (கிலேனொக்ஸ்கி, 2009). இந்தக் காரணங்களுக்காக முறைசாரா மதிப்பீட்டை வகுப்பறைக் கற்றலுக்கு அடிப்படையாகக் கொள்கிறோம்.

மதிப்பீடும் கற்பித்தலும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை. ஆசிரியர்கள் **'**எதற்கு மதிப்பீடு**'** என்பதை நன்கு அறிந்திருக்க வேண்டும். "மதிப்பீட்டின் நோக்கம் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதோடு அவர்களுக்கு ஆதரவு அளித்தல்" என்பதையும் உணர்ந்திருத்தல் வேண்டும்**.**

முறைசாரா மதிப்பீட்டை எழுத்துவழித் தேர்வுகளுக்கு மட்டுமே பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

சில எடுத்துக்காட்டுகள் (இவை தவிர்த்து வேறு சிலவும் உள்ளன):

**உயர்தரம் 2&3 தமிழ்மொழி இலக்கியம் - முறைசாரா மதிப்பீட்டுக்குரியவை (கற்றலுக்கான மதிப்பீடு)**

- கற்றல் தேவைகள், இலக்குகள், கற்றல் விவரங்கள், கற்றல் பாணிகள், ஈடுபாடு, கருத்துக்கணிப்பு முதலியவை
- மாணவர் கற்றல் தளத்திலுள்ள கருத்துக்கணிப்பும் கற்றல் பகுப்பாய்வும்
- நுழைவுச்சீட்டு (முன்னறிவைச் சோதிப்பதற்கு), வெளியேறும் சீட்டு (புரிந்துணர்வை அறிந்துகொள்வதற்கு)
- புதிர்கள் (காஹூட், மென்டிமீட்டர்)
- மனவரைபடங்கள்/கருத்து வரைபடங்கள்
- இணை வேலை/குழு கலந்துரையாடல் சார்ந்த நடவடிக்கைகள் (வாய்மொழிப் படைப்பு, விளக்கப்படங்கள் முதலியவை)
- சிந்தனை நடைமுறைகள்/சாக்ரடிக் கேள்விமுறை சார்ந்த நடவடிக்கைகள்

- நாடகவழியே கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தப்படும் மரபுகள் (முதன்மை இருக்கை அல்லது அசையாக் காட்சி நடவடிக்கைகள்)
- நாளேட்டுச் செய்திகள்
- பத்தி எழுதுதல் அல்லது முழுக் கட்டுரையை எழுதுதல் (நிகழ்வு, வருணனை, விவாதம், கருத்துவிளக்கப்படம்)
- படைப்பாக்கத்துடன் எழுதுதல் (கவிதை**,** சிறுகதைகள் முதலியவை)
- சிறு விளக்கவுரைகள்

**கற்றலை மதிப்பிடுதல்** என்பது மாணவர்கள் எவற்றைக் கற்றுள்ளனர் என்பதையும் கற்றல் இலக்குகளை அடைந்துள்ளனரா என்பதையும் உறுதிசெய்கிறது. இதன் அடிப்படை நோக்கங்கள் மதிப்பெண் வழங்குதல், தரவரிசைப்படுத்துதல், கற்றதைப் பதிவு செய்தல், பெறப்பட்ட மதிப்பீட்டுத் தரவுகளைக் கருத்துத்தெரிவிப்பாகக் கொள்ளுதல் முதலியன. இம்முறை பருவநிலை இறுதித் தேர்வாகவோ, மாணவர்களை அடுத்தநிலைக்கு உயர்த்தும் பொருட்டு நடத்தப்படும் ஆண்டிறுதித் தேர்வாகவோ அமையலாம்.

சில எடுத்துக்காட்டுகள் (இவை தவிர்த்து வேறு சிலவும் உள்ளன):

**உயர்தரம் 2 தமிழ்மொழி இலக்கியம் - முறைசாரா மதிப்பீட்டுக்குரியவை (கற்றலுக்கான மதிப்பீடு)**

- எழுதுதல் அடிப்படையிலான தேர்வு - கட்டுரை (நிகழ்வு, வருணனை, கருத்துவிளக்கம், விவாதம், கருத்துவிளக்கப்படம்)
- மின்னியல் தேர்வு - பனுவல் 1-க்கு விடையளித்தல் (தனிப்பகுதி)
- மின்னியல் தேர்வு - பனுவல் 2-க்கு விடையளித்தல் (பனுவலை அடிப்படையாகக் கொண்ட கருத்துரை எழுதுதல் உட்பட)
- எழுதுதல் அடிப்படையிலான தேர்வு - இலக்கியக் கட்டுரைகளை நிறைவு செய்தல் (4 வகைகளைச் சார்ந்த கேள்விகள், பார்த்திராத பனுவல் உட்பட)

சில எடுத்துக்காட்டுகள் (இவை தவிர்த்து வேறு சிலவும் உள்ளன):

**உயர்தரம் 3 தமிழ்மொழி இலக்கியம் - முறைசாரா மதிப்பீட்டுக்குரியவை (கற்றலுக்கான மதிப்பீடு)**

- எழுதுதல் அடிப்படையிலான தேர்வு - கட்டுரை (நிகழ்வு, வருணனை, விளக்கம், விவாதம், கருத்துவிளக்கப்படம்)
- எழுதுதல் அடிப்படையிலான தேர்வு - இலக்கியக் கட்டுரைகளை நிறைவு செய்தல்

கற்றலை மதிப்பிடுதல் (முறைசார்ந்த மதிப்பீடு) முறையை **2022 உயர்தரம் 2 தமிழ்மொழி இலக்கியத்** தேர்வுப் பாடத்திட்டத்திற்கான குறிப்புகளுடன் சரிபார்க்கலாம் (சிங்கப்பூர் மதிப்பீட்டுத் தேர்வுப் பிரிவின் இணையத்தளத் தகவல்களைப் பார்க்கவும்). இருப்பினும், ஆசிரியர்கள் தம் மாணவர் நிலையறிந்து எந்த அளவு, எப்போது மதிப்பிடுவது என முடிவு செய்வர். இது மாணவர்களைத் தேவைக்கு அதிகமாகச் சோதிப்பதைத் தவிர்ப்பதோடு அவர்களுக்கு ஏற்படக்கூடிய தேவையற்ற பதற்றத்தையும் அகற்றும்.

| **தாள்** | **கால அளவு** | **வகை** | **பகுதி** | **வினா வகை** | **வினா எண்ணிக்கை** | **மதிப்பெண் /அளவை** |
|---|---|---|---|---|---|---|
| **தாள் 1** | 1 மணி 15 நிமிடங்கள் | எழுதுதல் அடிப்படையிலான தேர்வு | கட்டுரை | கட்டுரை | 4 (ஒன்றைத் தெரிவு செய்க) | 35/17.5% |
| **தாள் 2** | 1 மணி 45 நிமிடங்கள் | மின்னியல் தேர்வு | பனுவல் 1 | சுய விடைக் கருத்தறிதல் | 5 | 32/16% |
| | | | பனுவல் 2 | சுய விடைக் கருத்தறிதல் | 4 | 33/16.5% |
| **தாள் 3** பார்த்திராத பனுவல் உட்பட | 3 மணி | எழுதுதல் அடிப்படையிலான தேர்வு | இலக்கியக் கட்டுரைகள் | சுய விடை | 8 (நான்கைத் தெரிவு செய்க) | 100/50% |
| **மொத்தம்** | | | | | 21 | 200/50% |

# பின்னிணைப்புகள்

**பின்னிணைப்பு - 1**

## <u>பரிந்துரைக்கப்பட்ட இலக்கியங்கள்</u>

| எண் | சிறுகதைகள் | ஆசிரியர்கள் |
|---|---|---|
| 1 | தேடல் | நா.கோவிந்தசாமி |
| 2 | எண்ணங்கள் நிலையானவை அல்ல | மா.இளங்கண்ணன் |
| 3 | கதவு | கி.ராஜநாராயணன் |
| 4 | நாடோடிகள் | இராம.கண்ணபிரான் |
| 5 | காஞ்சனை | புதுமைப்பித்தன் |
| 6 | விடியுமா? | கு.பா.ராஜகோபாலன் |
| | கவிதைகள் | ஆசிரியர்கள் |
| 7 | திருக்குறள்<br>• ஆள்வினையுடைமை (10)<br>• சொல்வன்மை (10)<br>• வினைத்திட்பம் (10) | திருவள்ளுவர் |
| 8 | பழமொழி நானூறு<br>• அதிகாரம் - நட்பின் இயல்பு – 4 பாடல்கள்<br>  • இனியாரை யுற்ற இடர்தீர் உபாயம்<br>  • தந்தீமை யில்லாதார் நட்டவர்<br>  • தெற்றப் பரிந்தொருவர் தீர்ப்ப<br>  • முட்டின் றொருவர் உடைய | முன்றுறையரையனார் |
| 9 | தமிழ் | பாரதியார் |
| 10 | எந்நாளோ? | பாரதிதாசன் |
| 11 | ஆட்டனத்தி ஆதிமந்தி | கண்ணதாசன் |
| 12 | எறும்பு-மனிதன்-இயற்கை | ந.பழனிவேலு |
| 13 | இயற்கை இன்பம் | சிங்கை முகிலன் |
| 14 | இரவிலும் பகலை எதிர்பார் | அமலதாசன் |
| 15 | கல்லின் காயம் | அப்துல் ரகுமான் |
| 16 | மரம் | வைரமுத்து |
| 17 | ஹைக்கூ கவிதைகள்<br>• கூண்டுக்கு விடுதலை<br>• குருவிக்கூடுகள், கடவுளைத்தேடி<br>• சோம்பல் மாணவன், எறும்புகள் வரும் நேரம் | நா.முத்துக்குமார்<br>ஏ.தேவராஜன்<br>ந.பச்சைபாலன் |
| | நாடகங்கள் | ஆசிரியர்கள் |
| 18 | சிங்கப்பூர் மாப்பிள்ளை | சே.வெ.சண்முகம் |
| 19 | ஊஞ்சல் | சுஜாதா |
| | நாவல் | ஆசிரியர் |
| 20 | சமுதாய வீதி | நா.பார்த்தசாரதி |

**பின்னிணைப்பு - 2**

## <u>பரிந்துரைக்கப்பட்ட இலக்கணக் கூறுகள்</u>

<table>
<tr><th>எண்</th><th>இலக்கணக் கூறுகள்</th></tr>
<tr><td>1</td><td>எழுத்திலக்கணம் – மறுதிருப்பம்</td></tr>
<tr><td rowspan="4">2</td><td>சொல்லிலக்கணம்</td></tr>
<tr><td>பெயர்ச்சொல் - பெயரின் இயல்பு, அறுவகைப்பெயர், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர், ஆகுபெயர்</td></tr>
<tr><td>வினைச்சொல் – வினை வகைகள் - தெரிநிலை-குறிப்புவினை; உடன்பாடு-எதிர்மறை; குன்றாவினை-குன்றியவினை; தன்வினை-பிறவினை; செய்வினை–செயப்பாட்டுவினை; துணைவினைகள்</td></tr>
<tr><td>எச்சவினை – பெயரெச்ச வகைகள்; வினையெச்ச வகைகள்</td></tr>
<tr><td rowspan="2">3</td><td>சொற்புணர்ச்சி – இயல்புப்புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி<br>• தோன்றல், திரிதல், கெடுதல்</td></tr>
<tr><td>• உயிரீற்றுப் புணர்ச்சி<br>    • உயிர்முன் உயிர்<br>    • உயிர்முன் மெய்<br>• மெய்யீற்றுப் புணர்ச்சி<br>    • மெய்முன் உயிர்<br>    • மெய்முன் மெய்</td></tr>
<tr><td>4</td><td>வாக்கிய உறுப்புகள்<br>எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், எச்சங்கள், அடைமொழிகள்</td></tr>
<tr><td>5</td><td>எழுவாய் பயனிலை இயைபு<br>• திணை, பால், எண், இடம், காலம்</td></tr>
<tr><td rowspan="4">6</td><td>தொடரிலக்கணம் – தொகைநிலைத்தொடர்; தொகாநிலைத் தொடர்</td></tr>
<tr><td>தொகாநிலைத்தொடர் – வினைமுற்றுத்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், எழுவாய்த்தொடர், விளித்தொடர், வேற்றுமைத்தொடர், இடைத்தொடர், உரித்தொடர், அடுக்குத்தொடர்</td></tr>
<tr><td>வேற்றுமைத்தொடர் - வேற்றுமை விரி<br>• எழுவாய் வேற்றுமை<br>• ஐ வேற்றுமை<br>• ஆல், ஓடு, உடன் வேற்றுமைகள்<br>• கு வேற்றுமை<br>• அது, உடைய வேற்றுமைகள்<br>• இன், இல், இடம் வேற்றுமைகள்<br>• இலிருந்து, இடமிருந்து வேற்றுமைகள்<br>• விளி வேற்றுமை</td></tr>
<tr><td>வேற்றுமைத்தொகை<br>வேற்றுமைத்தொகை வகைகள்<br>உருபும் பயனும் உடன்தொக்க தொகை</td></tr>
</table>

| | |
|---|---|
| | **அல்வழித்தொகை –** வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை |
| 7 | **மொழிப் பயன்பாடு** |
| | சாரியை, உம்மை வகைகள் |
| | ஒரு சொல் பல பொருள், ஒரு பொருள் பல சொல் |

பின்னிணைப்பு - 3

## <u>உயர்தரம் 2 – பரந்துபட்ட கருப்பொருள்களுக்கான வழிகாட்டும் வினாக்கள்</u>

| கருப் பொருள் | முக்கியக் கூறுகள் | பொதுவான கலந்துரையாடல்களுக்கான வழிகாட்டும் வினாக்கள் | இலக்கியப் பனுவல்கள் தொடர்பான வழிகாட்டும் வினாக்கள் | கலந்துரையாடலுக்குரிய தலைப்புகள் |
|---|---|---|---|---|
| **உறவு \ தொடர்பு** | ஒவ்வொன்றும் மற்றொன்றோடு தொடர்புடையது | 1. என்னென்ன உறவுகள் உள்ளன?<br>2. உறவுகள்\தொடர்புகள் ஏன் அவசியம்?<br>3. ஒவ்வொரு தனிநபருக்கும் சமூகத்தில் உள்ள பொறுப்புகள் யாவை?<br>4. ஒவ்வொரு தனிநபருக்கும் சமூகம் எவ்வாறு பொறுப்பேற்கிறது?<br>5. உறவுகள் சமுதாயத்தை எவ்வாறு வடிவமைக்கின்றன? | **1.** இலக்கியப் பனுவலில் தனிநபர், பொருள், நிகழ்வு ஆகியவற்றிற்கு இடையே உள்ள உறவையும் தொடர்பையும் ஆராய்க. கதாபாத்திரங்கள் இவற்றை எவ்வாறு எதிர்கொண்டன**?**<br>**2.** பனுவலில் காணப்படும் உறவுகள் எவ்வாறு படிப்படியாக வளர்ச்சியடைந்தன**?**<br>**3.** எந்தக் காரணிகள் பனுவலில் காணப்படும் உறவுகளின் வளர்ச்சிக்கு உதவுகின்றன**/** தடைகளாக அமைகின்றன**?**<br>**4.** கதையில் இடம்பெறும் சிக்கல் எவ்வாறு கதாபாத்திரங்கள்**,** களம்**,** கரு ஆகியவற்றின்மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது**?** உறவில் சிக்கல் ஏற்படுவதைத் தவிர்க்க இயலுமா**?** | 1. சுய அடையாளம்<br>2. தனிப்பட்ட உறவுவட்டம் - நட்பு, காதல், அன்புக்குரியோர்<br>3. தமக்கும் பிறருக்கும் உள்ள தொடர்பு<br>4. சமூகத்தோடும் தேசத்தோடும் சுற்றுப்புறத்தோடும் உள்ள தொடர்பு<br>5. கருத்துப்பரிமாற்றம் |
| | உறவுகளைப் பேணிப் பாதுகாக்கலாம் | **1.** நாம் உறவை ஏன் பேணிக்காக்க வேண்டும்**?**<br>**2.** எந்தக் காரணிகள் உறவுகளின் தோற்றத்திற்கு உதவுகின்றன**/**தடைகளாக அமைகின்றன**?** | | |

| கருப் பொருள் | முக்கியக் கூறுகள் | பொதுவான கலந்துரையாடல்களுக்கான வழிகாட்டும் வினாக்கள் | இலக்கியப் பனுவல்கள் தொடர்பான வழிகாட்டும் வினாக்கள் | கலந்துரையாடலுக்குரிய தலைப்புகள் |
|---|---|---|---|---|
| | | **3.** உறவுகளுக்கிடையே முரண்பாடுகள் ஏற்படும்போது என்ன ஆகும்?<br>**4.** பிறரோடு ஏற்படும் உறவுகளினால் மக்கள் எவ்வாறு மாற்றத்திற்கு உட்படுகிறார்கள்**?** | 5. உறவுகள் பனுவலிலுள்ள கதாபாத்திரங்களின் செயல்களில் எந்த வகையில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன**?**<br>6. பனுவலிலுள்ள ஒரு கதாபாத்திரத்தைத் தேர்ந்தெடுத்து அந்தப் பாத்திரமாக உன்னைக் கருதிக்கொள். கதையிலுள்ள உறவுகளை நீ எவ்வாறு வேறுவிதமாக அணுகுவாய்? | |
| **மாற்றம்** | மாற்றம் ஒன்றே மாறாதது | 1. இயல்பாக ஏற்படும் மாற்றங்கள் யாவை?<br>2. மனிதர்களால் ஏற்படக்கூடிய மாற்றங்கள் யாவை?<br>3. மாற்றங்கள் நிகழக் காரணங்களாக இருப்பவை யாவை?<br>4. மாற்றத்திற்கு முன்பிருந்த நிலையைப்பற்றி வினா எழுப்புதல் அவசியமா? | 1. பனுவலில் மாற்றம் என்னும் கருப்பொருள் எவ்வாறு வெளிப்பட்டிருக்கிறது?<br>2. பனுவலிலுள்ள கதாபாத்திரங்கள் எவ்வகையில் மாற்றத்தினால் பாதிப்படைந்திருக்கிறார்கள்**?**<br>3. பனுவலின் படிப்படியான வளர்ச்சி நிலையில் எவ்வகையான காரணிகள் மாற்றத்தைத் தூண்டுகின்றன? | 1. சுய வளர்ச்சி (உணர்ச்சியிலும் உள்ளுணர்விலும் ஏற்படும் மாற்றங்கள். எ.கா: மனநிலை மாற்றம்)<br>2. பண்பாட்டிலும் சமூகத்திலும் மாறிவரும் போக்கு<br>3. உலகமயமாகும் நகரத்தில் பண்பாட்டையும் |

| **கருப் பொருள்** | **முக்கியக் கூறுகள்** | **பொதுவான கலந்துரையாடல்களுக்கான வழிகாட்டும் வினாக்கள்** | **இலக்கியப் பனுவல்கள் தொடர்பான வழிகாட்டும் வினாக்கள்** | **கலந்துரையாடலுக்குரிய தலைப்புகள்** |
|---|---|---|---|---|
| | | 5. மாற்றம் தவிர்க்க இயலாததா? | 4. பனுவலிலுள்ள கதாபாத்திரங்கள் மாற்றத்தை ஏற்றுக்கொள்வதற்கும் எதிர்ப்பதற்கும் எவை காரணங்களாக அமைகின்றன?<br>5. பனுவலிலுள்ள கதாபாத்திரங்கள் எவ்வாறு மாற்றத்தை எதிர்நோக்குகின்றன?<br>6. பனுவலில் இடம்பெற்றுள்ள மாற்றத்தின் முக்கியத்துவம் என்ன? | விழுமியங்களையும் கட்டிக்காப்பது<br>4. சமூக, தேசிய, உலக நிலையிலான வளர்ச்சி<br>5. சிக்கலும் மாற்றமும்<br>6. புத்தாக்கம் |
| | மாற்றம் மாற்றத்துக்கு இட்டுச்செல்லும் | 1. நாம் ஏன் மாற்றத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்? மாற்றத்தை முழுமனத்துடன் ஏற்றுக்கொள்வது எப்படி?<br>2. நம் அன்றாட வாழ்க்கையில் மாற்றங்கள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன?<br>3. துன்பம் ஏற்படும்போது எதனால் சிலர் அதிலிருந்து மீண்டு வருகிறார்கள்? சிலர் துவண்டுபோகிறார்கள்?<br>4. மாற்றங்கள் எப்போதும் எதிர்பார்க்கின்ற விளைவுகளை ஏற்படுத்துமா? | | |

| கருப் பொருள் | முக்கியக் கூறுகள் | பொதுவான கலந்துரையாடல்களுக்கான வழிகாட்டும் வினாக்கள் | இலக்கியப் பனுவல்கள் தொடர்பான வழிகாட்டும் வினாக்கள் | கலந்துரையாடலுக்குரிய தலைப்புகள் |
|---|---|---|---|---|
| **தெரிவுகள்** | தெரிவுகளின் வெளிப்பாடே வாழ்க்கை | 1. தெரிவுகளுக்கும் விளைவுகளுக்கும் உள்ள தொடர்பு என்ன?<br>2. ஒருவர் எப்போது முடிவெடுப்பதற்குச் சிரமப்படுவார்?<br>3. சுய தெரிவுகளுக்கும் பொறுப்பேற்பதற்கும் இடையே நாம் எவ்வாறு சமநிலையைக் கடைப்பிடிப்பது?<br>4. வாழ்க்கையில் தெரிவுகள் ஏன் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன? | 1. கதாபாத்திரங்களின் வெவ்வேறு தெரிவுகளை மதிப்பீடு செய்க. தெரிவு செய்ய எந்த அளவுக்கு அவர்கள் தெரிந்து வைத்துள்ளனர்?<br>2. அடுத்தடுத்து வரும் நிகழ்வுகளை இந்தத் தெரிவுகள் எவ்வாறு பாதிக்கின்றன? இந்தத் தெரிவுகளின் முக்கியத்துவம் என்ன?<br>3. கதாபாத்திரங்களின் கடந்த கால அனுபவங்கள் அவர்கள் செய்யும் தெரிவுகளில் எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன? | 1. முடிவெடுத்தல்<br>2. சிக்கலுக்குரிய தீர்வு<br>3. கண்ணோட்டம்<br>4. பொறுப்புணர்வு<br>5. கதைக்களமும் கதையமைப்பும் |

| கருப் பொருள் | முக்கியக் கூறுகள் | பொதுவான கலந்துரையாடல்களுக்கான வழிகாட்டும் வினாக்கள் | இலக்கியப் பனுவல்கள் தொடர்பான வழிகாட்டும் வினாக்கள் | கலந்துரையாடலுக்குரிய தலைப்புகள் |
|---|---|---|---|---|
| | தெரிவுகள் பல வாய்ப்புகளையும் சாத்தியக் கூறுகளையும் தந்துதவும் | 1. சில நேரங்களில் தெரிவுகளின் விளைவுகளை ஏன் முன்னறிந்து கூற முடிவதில்லை?<br>2. ஒன்றைத் தெரிவு செய்யும்போது என்னென்ன வாய்ப்புகள் கிடைக்கும்?<br>3. எவற்றையெல்லாம் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்?<br>4. முடிவுகளும் விளைவுகளும் வெவ்வேறு மனிதர்களால் எவ்வாறு வேறுபடுத்தி உணரப்படுகின்றன?<br>5. வாய்ப்புகளை இழக்கும்போது ஒருவர் எவ்வாறு அதைச் சமாளிப்பார்? | 4. கதாபாத்திரங்களின் தீர்வுகளும் செயல்களும் எவ்வாறு அவர்களது பண்புகளை வெளிப்படுத்துகின்றன?<br>5. முக்கியப் பாத்திரங்களுக்கும் கதையமைப்பிற்கும் இடையே ஏற்படும் பதற்றநிலையைக் கதாபாத்திரங்கள் எவ்வாறு சமாளிக்கின்றன?<br>6. பனுவலிலுள்ள ஒரு கதாபாத்திரத்தைத் தேர்ந்தெடுத்து அந்தப் பாத்திரமாக உன்னைக் கருதிக்கொள். அந்தக் கதாபாத்திரத்தில் நீ எவ்வாறு வேறுவிதமான முறையில் ஒரு தெரிவைத் தேர்ந்தெடுப்பாய்? | |